
12

ஸ்ரீமகா பாரதத்தில்

ஓர்பாகமாகிய

# சகுந்தலை நாடகம்





அ. முத்துவடிவேல் முதலியாரால்

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

...ரைட] 1934 [இதன் விலை அணா 5

O-892MSH:S
N34
85997

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமகா பாரதத்தில்

ஓர்பாகமாகிய

# சகுந்தலை நாடகம்

இது

கூடலூர் தாலுக்கா

செம்மங்குப்பம் சான்றோர்குலம்

**S. ஷண்முகம் உபாத்தியாயரால்**

இயற்றப்பட்டு,

ஷை யூர்

கி. குப்புசாமிநாடார் அவர்களால்

பார்வையிடப்பட்டது.

---

**A. முத்துவடிவேல் முதலியாரால்**

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1934 [விலை அணு 6

# ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனுல் சகலமான அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில், ம-ா-ா-ஸ்ரீ, கூடலூர்தாலுக்கா செம்மங்குப்பம் சான்ருேர்குலம் S. ஷண்முகம் உபாத்தியாயர் அவர்களால் இயற்றிய "ஸ்ரீமகாபாரதத்தில் ஓர்பாகமாகிய சகுந்தலைநாடகம்" ஆகிய இப்புத்தகத்தை ஷியாரிடம் சகல சுதந்தரமும்பெற்று அடியிற்கண்ட என்னுல் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகா கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கின்றேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுத்தாவின்றி யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு

**A. முத்துவடிவேல் முதலியார்.**

---

# சாற்றுக்கவி

கூடலூர் தாலுக்கா மதுக்கரை

தமிழ் வித்வான்

**M. கோபாலசாமி நாடார் இயற்றியது.**

---

நேரிசை வெண்பா

களவு நெறியொழுகி கற்பின் சால்புற்ற
இள்மான் சகுந்தலையின் இன்பம்—விளங்குஞ்சீர்
சான்றோர் குலதிலகன் சண்முகநா டன்மொழிந்து
ஆன்ற புகழ்தரித்தான் மேல்.

ஸ்ரீ
கண்ணபிரான் துணை

# ஸ்ரீமகா பாரதத்தில்

ஓர்பாகமாகிய

# சகுந்தலை நாடகம்

### விநாயகர் துதி

மன்னுதமிழ் மறையுணர்ந்த மாதவரும் மற்றவரும்
மனதி லோர்ந்து
கன்னல்பால் தேனும் பருப்புங் கலந்துபடைத்து
பரிந்து நோக்கு
துன்னு கடைவாய் நின்றுதொழு திருவினையைத்
துடைத்து நிற்பர்
முன்னவ னிருதாளை வணங்கியேத்த முடியாத
தொன்று வுண்டோ.

### சிவன் துதி

அம்புவி கொன்றைச் சூடி அழலொடு மழுமா னேந்தும்
உம்பர்க்கு முதல்வ னுன ஒருவனை உளத்து நண்ணி
இம்பரில் கற்பின் மிக்காள் இளங்கொடி சகுந்த லைச்சீர்
அம்புவி யோர்கள் போற்ற அன்புட னுரைப்போ மாதோ.

### கண்ணன் துதி

அண்டர்தம் துயரந் தீர அலைகடல் பள்ளி விட்டு
மண்டல மதனில் மிக்க மானிடப் பிறவி யுற்று-
தொண்டர்க்கு தொண்ட னுன தூயவன் பாதம் போற்றி
ஒண்டொடி சகுந்த லையின் உயர்திறஞ் செப்பு வேனே.

### தேவேந்திரன் வருகிற கவி

சித்திர மணிமகுடம் பளபளென்ன
செவியில் குண்டலங்கள் தகதகென்ன
பத்தியாய் மேனகைரம்பை நடனஞ்செய்ய
பாசமாய் திலோர்த்தமை கவரிவீச
அத்தியை யுரித்தணிந்த பரமன்பாதம்
அனுதினந் தவறுமல் துதிக்கவல்லோன்
எத்திசையும் புகழ்படைத்த தீரனை
இந்திரன் கொலுவாக வருகின்றனே.

தரு

திசையெட்டும்புகழ்கெம்பீரன் தேவர்க்கதிபனான
தேவேந்திரராஜன் வந்தேன் பொன்னுலகத்தையாளும்
தேவேந்திரராஜன் வந்தேன்

திக்குபாலகர்கள் திருவடிவணங்கிட
சுருள் தாளங்கின்னரி பேரிகைமுழங்கிட
தையல்மேனகை ஊர்வசிநடித்திட திசை

தங்கமகுடம்சென்னி தகதகதகவென்ன
செங்கதிரொளிபோல செவியில்குண்டலமின்ன
சுருள் தேவகுருவும் ஆவலாய்சூழ
விந்தையாய்தேவர்கள் வந்துமேதாழ திசை

விந்தையில்மிகுந்த சுந்தரனிவனென்று
சிந்தைமகிழ்கூடியாய் தேவர்பூமாரிபெய்ய
சுருள் தீரமாயசுரரை மடித்திடுந்தீரன்
தீதிலாவச்சி ராயுதவீரன் திசை

அந்தமாய்ரிஷிகளும் ஆசீர்மிகவதிக்க
அண்டமளாவிநிற்கும் விருதுகொடிபறக்க
சுருள் ஆகமவேத புராணமறிந்தவர்
ஏகபோகமாய் செல்வம்வாய்ந்தவர் திசை

தேவேந்திரன் கவி

அரகராகயிலைவாசா அம்பலத்தரசேபோற்றி
திரிபுரம்நகைத்தெரித்த தேவனேபோற்றிபோற்றி
கரிதனையுரித்தணிந்த கெங்காதரனேபோற்றி
நரிதனைபரியாய்ச்செய்த நாயகாபோற்றிபோற்றி.

தேசவிசாரணை

(முத்திநெறியறியாத என்ற சந்தம்)

தரு

மாதங்கள் தவறாமல் மேகங்கள் தான் கூடி
மாரியேபெய்கின்றதா மந்திரியேயுரைத்திடுவீர்

ஆலயபூசைகளும் காலமுந்தவறாமல்
அன்புடனே நடக்கின்றதா அறிவிப்பீர்மந்திரியே

மறையவர்செய்கின்ற யாகாதிநேமநிஷ்டை
கருத்துடனே செய்கின்றாரா கழறுவீர்மந்திரியே

கற்பதுஅழியாமல் கணவனையேதெய்வமாக
கன்னியர்கள்தொழுகின்றாரா கழறுவாய்மந்திரியே மா

### தேவேந்திரன் கவி

மந்திரிமாரேகேளீர் மாதவமுனிவர்தேவர்
சிந்தையுந்தான்களித்து சீர்சபைவந்ததாலே
அந்தமாயவரவர்க்கு ஆசனம்மிகவேதந்தோம்
விந்தையாய்கொலுவில் வீற்றுமேஇருப்போம்நாமே.

### வசனம்

ஆனல் கேளுங்கள் மந்திரிமார்களே! தேவர்கள் முனிவர்கள் யாவரும் கொலுவாக வீற்றிருப்போம் மந்திரிமார்களே.

### பொது வசனம்

அகோதெப்படி யென்றால் இந்திரன் கொலுவாகயிருக்க கௌசிக முனிவர் இமையமலைசார்பில் தவம்செய்ய வருகிறவிதம் காண்க.

### விஸ்வாமித்திரர் வருகிற கவி

பாதிசேர்மதியணிந்த பரமனைக்கோரிதவம்
நீதியாய்செய்வதற்கு நீண்டதோர்சடைமுடித்து
கோதிலாருத்ராட்சத்தோடு குண்டலஞ்செவியிலாட
காதியின் மைந்தன கௌசிகர்வருகின்றாரே.

### கௌசிகர் தரு

கெங்கைவேணியனை சங்கரன்பாதம்போற்றும்
கௌசிகமகாமுனிவர்வந்தார் கொலுவைநாடி
கௌசிகமகாமுனிவர்வந்தார்

அங்கமதில்வெண்ணீறை எங்கும்நிறையபூசி
சுருள் அருந்தவமுனிவர்கள் போற்றியேதாழ
அன்புடனிருடிகள் வந்துமேசூழ கௌ

சடைமுடியுங்குலுங்க தாவிநடைநடந்து
திடமுடன்காவியுடை யிடையில்மிகவணிந்து
சுருள் பொன்னிறகவச குண்டலமிலங்க
உன்னிதமுப்புரி நூலுமிலங்க கௌ

அருந்தவமிகசெய்து அஷ்டமாசித்திபெற்றேன்
கருதியேவேதமதை களங்கமறவேகற்றேன்
சுருள் கரமதில்கமண்டலங் கிரமுள்ளதெண்டு
பரிவுள்ளபுலித்தோ லாசனங்கொண்டு கௌ

அகோரமுடனேயின்று அருந்தவமிகச்செய்ய
அன்புடன்மேருகிரிக் கருகில்வாரேனே துய்ய
சுருள் அவசரமாயதி வேகமாய்நாடி
தவமதுசெய்வேன் புகலவேதேடி கௌ

கௌசிகர் கவி

சுரர்முனி தேவரோடு சுந்தரபிரமன்மெச்ச
பரமனைக்கோரிநிஷ்டை பத்தியாய்கூறுதற்கு
உரியவேஜெபதபங்கள் உத்தமன்தான்முடித்து
அரிதானமுனிவர்சூழ அன்புடன்செல்லுவேனே.

வசனம்

ஆனால் கேளுங்கள் முனிவர்களே! இன்றையநாளில் இமயகிரிச் சார்பில்சென்று முனிவர்கள் செய்யக்கூடிய தவத்திற்கு மேலாக தவம் செய்யப்போகின்றேன். ஆதலால் அனைவரும் பின்பற்றி வாருங்கள்.

கௌசிகர் தரு

தேவலோகத்தைவிட்டுமே கௌசிகமுனி
ஆவலாய்தான்நடந்தாரே தவமேசெய்ய

நீண்டசடைகுலுங்கவே மாமுனியும்
தாண்டிவேகமாகவாறாரே சந்தோஷமாக

பாரிலுள்ளமுனிவர்க்குமேலாய் தவத்தைசெய்து
பாரோர்மனங்களிக்கவாறாரே வேகமதாக

காடுமலைசுனைகள்தாண்டினார் மகாமுனியும்
கடிகிவேகமாகவந்தாரே இமயமலை தேவ

கௌசிகர் விருத்தம்

விந்தையாய்தவங்கள்செய்யும் முனிவரேசொல்லக்கேளீர்
இந்தஓர்இமயமலை எழில்பெருஞ்சார்பின்கீழே
பந்தபாசத்தைவிட்டு பரமனைக்கோரிமிக்க
சிந்தனையோடுக்கியானும் சீறியதவம்செய்வேனே.

வசனம்

ஆனால் கேளுங்கள் முனிவர்களே! இமயமலைச்சார்பில் பந்தபாசத்தைநீக்கி இன்றையநாளில் பரமனைக்கோரி தவம்செய்கிறேன். அனைவரும் பணிவிடைசெய்துகொண்டிருப்பீர் முனிவர்களே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் கௌசிகமுனிவர் அகோரமாகிய தவம் செய்யும்போது அந்த தவச்சுவாலையானது தேவலோகங்களெல்லாம் அனற்கொண்டுவீச அதை தேவேந்திரன் அறிந்து முனிவனுடைய தவத்தையழிக்க யோசனைசெய்கிறவிதங் காண்க.

தேவேந்திரன் விருத்தம்

தேவரேசொல்லக்கேளீர் திடமுடன்கௌசிகன்தான்
மூவரிலீசனான மூர்த்தியைவேண்டிநிஷ்டை

மேவியேசெய்ய அக்னி மேலதுஉலகமெல்லாம்
தாவியேஅழிப்பதாலே தையல்மேனகையையழைப்பீர்.

வசனம்

ஆனால் கேளுங்கள் தேவர்களே! கௌசிகமுனிவன் அகோரமாகிய தவஞ்செய்வதால் தேவலோகமெல்லாந் தீயானது அதிகமாய்வீசுகிறது. அதனால் தவத்தை யழிக்கும்பொருட்டாக மேனகையை சீக்கிரம் அழைத்து வாரீர்.

மேனகை வருகிற விருத்தம்

இந்திரனழைத்தசேதி யேந்திழைகாதில்கேட்டு
அந்தமாய்ப்பணிகள்பூண்டு அகிலத்தோர்கண்டுவாட
கந்தமுங்களபம்பூசி கஸ்தூரிவாடைவீச
விந்தையாய்மேனகைமாது விரைவுடன்வருகின்றாளே.

மேனகை தரு

மதிமுகவதனரூபி
மேனகைமாதுவந்தாள்
பதியில்சிறந்தநல்ல
கொலுமுன்பாக

அன்னநடைநடந்து
கன்னியர்புடைசூழ
அகிலத்தோர்கண்டுவாட
கண்மணிவாறாள்

திலகந்தளதளென்ன
கலைமுகவதனமுள்ள
இலகும்பணிகள்மின்ன
கன்னியும்வாறாள்

கம்மல்காதில்ஜொலிக்க
அம்புவியில்சிறந்த
கனகபணிமார்பிலாட
அரிவையும்வாறாள்

கொண்டைப்பூச்செண்டுமோட
கெண்டைவிழியையொத்த
குலுங்கநடைநடந்து
கிளிமொழிவாறாள்

காலிலணிந்ததண்டை
சோலைக்குயில்தொனியாள்
கலகலகலவென்ன
சுந்தரிவாறேன்

வண்மையுள்ளசெம்மங்குப்பம்
ஷண்முகஞ்செந்தமிழ்பாடி
வாழுஞ்சிறுபாலனுன
தையலும்வாறாள்

மேனகை விருத்தம்

சுந்தரந்தனில்மிகுத்த சொகுசுள்ளமன்னாகேளீர்
விந்தையாய்சித்தர்முத்தர் விண்ணவர்சூழ்ந்திருக்கும்
அந்தமுள்ளசபையிலென்னை அருமையாயழைத்ததென்ன
வந்தனஞ்செய்துகின்றேன் வஞ்சியைக்கார்த்திடீரே.

வசனம்

ஆனால் கேளும் தேவர்க்கதிபதியான மன்னனே! என்னை யாது காரணமாய் அழைத்தீர். தங்கள் திருவடிக்கு அடியாள் அநேக நமஸ்காரம் அரசே.

தேவேந்திரன் கவி

அன்னமேமானேதேனே அடிதனைப்பணிந்ததாலே
கன்னியேஉன்னையிந்த காசினியோர்கள்மெச்ச
உன்னிதமாகயிந்த உலகினில்வாழ்ந்திருப்பாய்
இன்னிசையிராகத்தோடு இவ்விடம்நடித்திடாயே.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே மேனகைமாதே! என்பாதம் பணிந்த படியால் என்றைக்கும் சுகமாக வாழ்ந்திருப்பாய். தேவர்கள் மெச்சும் படியாக நாட்டியம் செய்குவாய் மாதே.

மேனகை தரு

தேவாதேவா சாமோமனோஹரா
தேவாதேவா சாமோமனோஹரா

வாவாவாவா மாயமதனேஎன்முன்
வாவாவாவா மாயமதனேஎன்முன் தே

ஜாவளி தரு

சல்லாபசௌந்தரனே சாமியென்னமோமோடி
வில்லைமதன்வளைத்து விடுகிறான்வாளிதேடி

குங்குமக்களபம்பூசும் அங்கம்விம்முதேசாமி
செங்கனியிதழ்சுவைக்க சித்தம்நாடுதேசாமி

சுந்தரமுகவதன சரசனேமாராநேமி
வந்துயிந்தவேளைமன சந்தோஷமாவாய்சாமி

நல்லகுணந்தானமைந்த அன்பரேவாருஞ்சாமி
கல்லோவுன்மனமது கண்ணால்பாருமேசாமி

தேவேந்திரன் விருத்தம்

மாரனுக்கண்டுவாட மங்கையேநடித்ததாலே
நாரியேஉந்தன்மீது நான்மிகுமகிழ்ச்சிகொண்டேன்
சீரியேகௌசிகன்தான் தவமதுமேருபக்கல்
சாரியாய்செய்கிறான்நீ சீக்கிரம்அழித்துவாராய்.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே மேனகை! உன் நடனத்திற்காக தேவர்கள் சந்தோஷப்பட்டார்கள். ஆயினும், நீ மேருகிரிச்சார்பில் தபஞ் செய்யும் கௌசிகனது எண்ணத்தைமாற்றி உன்னுடைய மையலில் சிக்கச்செய்து வருவாய் பெண்ணே.

### மேனகை தரு

தேவர்க்கதிபனேகேளுமே — சிந்தையும்வாடாமல்
தேவர்க்கதிபனேகேளுமே

கௌசிகன் தவத்தையழிக்க — கன்னியாளுமாகாது
சுருள் — காமியாசையை — வெறுத்தவராச்சே
கன்னியாள்சென்றால் — கவலையுமாச்சே — தேவ

### தேவேந்திரன் தரு

முனிவர்தபத்தையழிக்கவே — உன்னாலேமுடியுமே
முனிவர்தபத்தையழிக்கவே

முனிவன்தபத்தையழித்து — மங்கையேநீயும்வந்தால்
சுருள் — மூவரும்தேவரும் — புகழுவாருன்னை
தாவியேசீக்கிரம் — செல்லுவாய்முன்னே — முனி

### மேனகை தரு

கோபத்தில்மிகுத்தவராச்சுதே — கௌசிகமுனியும்
கோபத்தில்மிகுத்தவராச்சுதே

சாபம்எனக்களிப்பார் — தையலுஞ்செல்லமாட்டேன்
சுருள் — சுந்திர அரிச்சந்திரன் — தன்னையே
சிந்தைகலங்கவே — செய்தாரேமுன்னையே — கோப

### தேவேந்திரன் தரு

நீதிதன்னையேபேசுறாய் — அடிபெண்ணேநீதான்
நீதிதன்னையேபேசுறாய்

நீதிகதைகளைப்பேசி — நிற்காதேஎன்முன்வேசி
சுருள் — நாரியேகௌசிகன் — தவமதையழித்து
கோரியேசீக்கிரம் — வருகுவாயொழித்து — நீதி

### மேனகை கவி

சிந்தையும்வாடவேண்டாம் தார்முடிபூண்டமன்னா
குந்தகம்நேர்ந்தபோது கோதையைபாதுகாப்பீர்
அந்தமாய்முனிவன்செய்யும் அகோரதவசழித்து
விந்தையாய்வருகுவேன் விடையதுதருகுவீரே.

### வசனம்

கேளுமதிபனே! கௌசிகமுனிவர் அதிக கோபமுள்ளவராச்சுதே; என்னை தூஷிப்பார் என்றதற்கு நீர் கோபங்கொள்ளுகின்றீர். நீர் எனக்கு என்ன துன்பம் வந்தபோதிலும் தீர்த்து வைக்கவேண்டும் விடைதருவீர் கௌசிகர் தபத்தையழித்து வருகிறேன்.

### தேவேந்திரன் கவி

பங்கயவதனமுள்ள பதிபுகழ்மாதே கேளாய்
இங்கிர்தமுடனே சென்று இளமுலைகாட்டியின்று
பொங்கமாய்சாடைகாட்டி புத்தியையுன்வயத்து
நங்கையே ஆக்கிக்கொண்டு நலமுடன்வருகுவாயே.

### வசனம்

கேளும் பெண்ணே மேனகைமாதே! மேருகிரிமலைக்குச்சென்று கௌசிகர் தபத்தை சீக்கிரம் அழித்துவரவேண்டும்.

### பொது வசனம்

இவ்விதமாக மேனகையானவள் கௌசிகர் தவஞ்செய்யும் விடத்திற்கு வரும்போது கௌசிகர் தவஞ்செய்கிறவிதம் காண்க.

### கௌசிகர் தரு

கெங்கைசடைதரித்த மங்கைபாகனே ஓமகாதேவா
கௌசிகன்செய் தவத்திற்கிரங்கிவா ஓமகாதேவா

பங்கையபிரமனை சிரமதுகிள்ளினாய் ஓமகாதேவா
பாலனுன்செய்யும் பக்திக்கிரங்கிவா ஓமகாதேவா

மண்ணைசுமந்து பிரம்படிகொண்டவா ஓமகாதேவா
மான்மழுசூல கபாலம்பிடித்தவா ஓமகாதேவா

வண்மையாய்தில்லை காளியைசெயித்தவா ஓமகாதேவா
வெள்ளிரிஷபமேறி திரிபுரமெரித்தவா ஓமகாதேவா

பிள்ளைக்கறியைத்தின்ற பித்தனேவருகுவாய் ஓமகாதேவா
புனிதனுன்செய்யும் தவத்திற்கிரங்கிவா ஓமகாதேவா

கண்ணப்பன்தின்ற கறிசுவையுண்டவா ஓமகாதேவா
பண்ணவமுனிவர்கள் துயரத்தைத்தீர்த்தவா ஓமகாதேவா

### கௌசிகர் விருத்தம்

திரிபுரம்நகைத்தெரித்த திகழொளிகண்ணாபோற்றி
கரிதனையுரித்தணிந்த கண்ணுதலுடையாய்போற்றி
நரிதனைபரியாய்ச்செய்த நற்றவபொருளேபோற்றி
அரிபிரமன்தேடிக்காணா அம்பலத்தரசேபோற்றி.

### மேனகை தரு

இமையமலைக்குநாடினாள் இனியகீதம்பாடினாள்
அரும்புமலர்கள்சூடினாள் அருந்தவனைத்தேடினாள்

கண்ணில்மையைத்தீட்டினாள் கடைக்கண்சாடைகாட்டினாள்
கஸ்தூரிபுனுகுபூசினாள் கடுகிகரத்தைவீசினாள்

அன்னநடைநடந்தனள் அருந்தபோவனங்கண்டனள்
சின்ன இடைதுவளவே செகத்தோர்கண்டுமகிழவே இ

மேனகை கொச்சகம்

அந்தமாய்முனிவன் அருந்தவஞ்செய்கின்ற
விந்தையுள்ளவனத்தைநாடி மெல்லியும்வந்துசேர்ந்தேன்
இந்திரன்சொற்படி இவர்தவசையழிக்கவே
சிந்தையும்வாடுதையோ செகதீசாயென்னசெய்வேன்.

மேனகை தரு

கௌசிகமுனியேவாருமே என்னை
கட்டியணைந்துசுகம் முத்தமேதந்திட கௌ

கானகந்தன்னிலே கண்மூடிதவஞ்செய்து
காக்ஷிதரும்ஈசனுல் மோக்ஷம்பெருகவேண்டாம்
கோதை யோடுமிக
வாது பேசாமலே
சாது எழுந்திருமே
மாது இன்பமேதாரேன் கௌ

மூடும்விழிதிறந்துபாருமே எந்தன்
முல்லையரும்பைப்போன்ற பல்வரிசைமுகத்தை மூ

ஆடும்பரமனைக்கோரி அருந்தவஞ்செய்யவேண்டாம்
தேடும்பரமன்பதி சேயிழைதருகிறேன்
சீறும் தவத்தைவிட்டு
நீரும் எழுந்திருந்து
கோரும் எனதழகை
பாரும் இதுசமயம்
சேரும் பிரியமாக
கூறும் பதிலெனக்கு கௌ

மேனகை வேறு தரு

தையல்ரூபம்மாற்றினள் சரிகையாடைபோக்கினள்
போக்கினள்நீக்கினள் மதன்சரத்தைதாக்கினள்
அத்தர்புனுகுவீசவே அருமுனிவன்கூசவே
கூசவேபேசவே கோதையுஞ்சென்றுள்நேசவே தை

கௌசிகர் சிசபத்தியம்

ஈசனைக்குறித்துநான் அருந்தவஞ்செய்யும்போது
வாசனை அத்தரும் வாடையும்வீசுதிங்கே

பாசமாய்இன்றுமே புதுமையாய்இருக்குதே
மோசமும்வந்ததே முனிவனும்என்செய்வேன்.

வசனம்

அரகரா! சம்போசங்கரா! மகாதேவா! புதுமையாக இன்றைய நாளில் அத்தர் புனுகு புஷ்பவாடை வீசுகின்றது. இதுயார் சூதோ தெரியேன் கடவுளே.

கௌசிகர் தரு

கலைமுகவதனசிங்காரி தூய
கன்னல்மதனரதிதன்னையழித்தவதி கலை

அலைகடலில்பிறந்த அன்னைலட்சுமிதானோ
அன்னம் போலநடை
மின்னல் கொடிசடை
பண்ணுங் கதலிதுடை
உன்னித மானஉடை கலை

கௌசிகர் வேறு தரு

பெண்ணேஎந்தனைச்சேருமே மடமானேஅடிதேனே
பேதமைகுணமுள்ளமாதரசே பெண்

வண்ணமதையறிந்தேன வஞ்சிமேனகையென்று
கண்ணேஎந்தனைச்சேர களிப்பாய்வாருமேஇன்று பெ

மேனகை தரு

முனியேஎட்டநீநில்லுமே எனைக்கண்டுமோகங்கொண்டு
மருகிடயுரைத்தாய் அருந்தவமுனியே மு

உனைவிடயோக்கியன் உலகத்தில்கிடையாதே
உத்தமாஎந்தன்மீது சித்தமுங்கொள்ளாதே மு

கௌசிகர் தரு

சித்தசன்கணையால்வாடுறேன் மதன்மிஞ்சிமிகஅஞ்சி
சிநதைமகிழ்ச்சியுடன் வந்துதன்னைசேர்ந்திடும் சி

அத்தன்பரமன்தவம் அழிந்துபோச்சுதேபெண்ணே
ஆகாஎனக்குமோகம் அதிகமாகுதேகண்ணே சி

மேனகை தரு

தவத்தில்சிறந்தமுனியே கேளும்இனியேமிகதனியே
தையல்எந்தன்மீது மோகமேகொள்ளாதே த

ஆபத்துஎனக்குநேரும் அன்பாயுந்தனைச்சேர்ந்தால்
அமரர்க்கதிபனிந்திரன் அரிவையைசேர்க்கமாட்டார் த

### கௌசிகர் கொச்சகம்

திங்களைபழித்தமுக தையலேசொல்வேன்கேளும்
நங்கையேயுந்தனலே நல்லதோர்தவமும்போச்சே
மங்கையுந்தன்மீது மோகங்கொண்டதாலே
சங்கையுமற்றுஎன்னை சந்தோஷமாய்சேர்வாரும்.

### மேனகை தரு

உந்தனைசேர்ந்திடலாகுமா எந்தன்
விந்தைக்குசுடுமீயாகுமா

கந்தமூலந்தின்று கானகத்தில்திரியும்
கௌசிகமுனியே பவுஷியுனக்கேது உந்

### கௌசிகர் தரு

மாதுநீதெரியாமல்பேசுருய் ராஜ
மன்னனுச்சேகைவீசுருய்

சாதுவன்என்றுமே சந்தேகங்கொள்ளாதே
சாபத்தைத்தருகுவேன் தையலேவிள்ளாதே மா

### மேனகை தரு

சித்தனென்றபேரையெடுத்து என்னை
சேர்ந்திடலாகுமோயடுத்து

அத்தியுரித்தணிந்த ஆண்டவனைக்கோரி
அருந்தவஞ்செய்வீரே அன்புடனேதேறி சி

### கௌசிகர் தரு

பெண்ணே இதுயென்னமோசம் நீ
பேசுருய்வாதுநாசம்

கண்ணேகருங்குயிலே காமத்தால்வாடுறேன்
காதலியேவாது பேசாதேநாடுறேன் பெ

### மேனகை விருத்தம்

ஆசையுமற்றுகானில் அருந்தவஞ்செய்துநொந்த
கோசிகமுனியேகேளும் கோபமுங்கொள்ளவேண்டாம்
நேசமாயிந்திரலோகம் நிற்காமல்செல்லவேண்டும்
பாசமாயென்னைச்சேர்ந்து பகருவீர்விடையுந்தானும்.

### வசனம்

ஆனல் கேளும் முனிவரே! இந்திரன் என்மீது கோபங்கொள்வார். உனது மனதின்படி சேரவாரும் கௌசிகமுனிவரே.

கௌசிகர் கவி

மன்மதன்கணையினாலே மனமதுமிகவும்வாடி
அன்புடனுன்னைச்சேர்ந்து அடைந்ததோர்சுகமும்போதும்
கன்றுமான்கரம்பிடித்த கர்த்தனைக்கோரிநிட்டை
இன்பமாய்செய்யப்போறேன் ஏந்திழைசென்றுவாறேன்.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! மதன் கணையினால் வாடி தியங்கி உன்னைச்சேர்ந்து சுகமடைந்தது போதும் சென்றுவாரும் பெண்ணே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் முனிவன் மேனகையைச் சேர ரிஷி பிண்டம் இரவுதங்காதென்ற பழமொழிப்போல் மேனகைவயிற்றில் கெற்பந்தரித்து உடனே பெண்குழந்தை பிறக்க, மேனகை சொல்லு கிறவிதங் காண்க.

மேனகை தரு

தவமதில்சிறந்த புவனம்மெச்சுங்கெம்பீரா
 தையல்பிறந்தாளிதோபாருமே நாதா
 சிந்தைகளிப்பீரேநீருமே தவ

கௌசிகர் தரு

உந்தன்வயிற்றில்பிள்ளை விந்தையாய்ப்பிறந்ததாலே
 சந்தோஷமதுகொண்டேன்பாவையே மாதை
 விந்தையாயெடுத்துச்செல்லும்பூவையே உந்

மேனகை தரு

ஆகாதவார்த்தைதன்னை அறிவிக்கவேண்டாம்நாதா
 அன்பாய்குழந்தைதனைப்பிடியுமே நான்
 இந்திரன்பதிபோறேன்விடியுமே

கௌசிகர் தரு

போறேனென்றுசொன்னமாதே பிள்ளைகையிலேந்தி
 பொற்கொடியேசென்றுவாருமே பெண்ணே
 போறேன்நான்தவத்திற்குபாருமே

மேனகை வேறு தரு

ஓடாதேநில்லுமேநாதா எந்தன்நாதா இப்போ
உந்தனைவிடமாட்டேன்நீதா பெருஞ்சூதா
தேடியேகுழந்தையை திகைக்கவேவிட்டீரே
சேயிழைக்குப்பதில் சொல்லுமேகெட்டிரே ஓடா

கௌசிகர் தரு

பிள்ளையெனக்குசொந்தம்இல்லையே அடிஇல்லையே நீ
பேசுறாய்வீண்வாதுதொல்லையே அடிசள்ளியே
கள்ளியேவீண்வாது துள்ளியேபேசுராய்
கன்னியெனக்குசொந்த மில்லையேவீசுராய் பிள்

மேனகை தரு

சந்நியாசிபோல்வேடந்தரித்தாய் முனியேதரித்தாய் நீ
சாமியென்றபெயர்எடுத்தாய் புவியில்எடுத்தாய்
கன்னியைபெற்றுமே கானில்விடலாமா
கலங்குதேஎன்நெஞ்சம் குலத்தைக்கெடுக்கலாமா சந்

கௌசிகர் தரு

மடிபிடித்திழுத்திட்டாய்என்னையே அடிஎன்னையே நீ
மங்கையேதந்திட்டாய்முன்னையே அடிகன்னியே
விடுவிடுஎந்தனை வனமதுயான்போறேன்
வஞ்சியைஎடுத்துமே சென்றிடுவாய்வாரேன் மடி

மேனகை விருத்தம்

செல்வியும்வேண்டாமென்று தெரிவித்தமுனியேகேளீர்
தொல்லைகள்எனக்குண்டாகும் துயருண்டுகுழந்தைதன்னால்
புல்லுவேன் இந்திரலோகம் பூவையுஞ்செல்லவேண்டும்
நல்லதோர்வனத்தில்மாதை நானுமேபோட்டுச்செல்வேன்.

வசனம்

ஆனால் கேளும் கௌசிகமுனியே! பிள்ளை உனக்குச்சொந்தமில்லை என்றபடியால் எனக்கும் இந்தப்பிள்ளை சொந்தமில்லை, ஆதலால் இதோ வனத்தில் தழைத்திருக்கு மரத்தடியில் குழந்தையைப்போட்டு விட்டேன். இனி தேவலோகம் சென்றுவாரேன் முனிநாதனே.

பொது வசனம்

அகோதெப்படி என்றால் கௌசிகர் மேனகையைச் சேர்ந்துபெற்ற பிள்ளையை இருவருக்கும் சொந்தமில்லை என்று வனத்தில் குழந்தையைவைத்து இருவரும்போய்விட, சகுந்தலா பக்ஷியானது குழந்தையை பாதுகாத்துவருகிறபோது, கண்ணுவ மஹாமுனிவர் தவஞ் செய்யும்படியாக சபைநாடி வருகிறார்.

கண்ணுவமுனிகொலு விருத்தம்

வெண்ணீறுவுடலெங்கும் விளங்குகின்ற
தண்ணளியுடைய பெரும்தவத்தோர்சூழ
கண்ணனைய ஆசிரமம் கடந்து அப்பால்
கண்ணுவருந்தவஞ்செய்யக் கருதிவாரார்.

கண்ணுவரிஷி தரு

கண்ணுதல்கழல்வணங்கி கருத்தில்மிகத்துதிக்கும்
கண்ணுவரிஷியும்வந்தார் தவங்கள்செய்ய
கண்ணுவரிஷியும்வந்தார்

எண்ணமடக்கியோகம் ஏகாந்தமாகநின்று
திண்ணமைம்புலன்வென்று திடமாய்ச்செய்வேனென்று
சுருள் தீதிலாசரியை கிரியைவிட்டேன்
வாதிலாயோக ஞானமுந்தொட்டேன் கண்

தண்டுகமண்டலமுஞ் செபமாலையுமிலங்க
சார்ந்தகுழையினேடு சடைமுடியுங்குலுங்க
சுருள் சங்கரன்நாமம் வாயொடுபேசி
லிங்கமேல்மலர் கையொடுவீசி கண்

அக்கமாலையணிந்த ஆரியரானபல
தொக்கசீடர்களோடு துலங்குமொழிசிலது
சுருள் தூய்மையாகவே தொல்மறைபோல
வாய்மையாகவே வழங்கியசீலன் கண்

பதிபசுபாசமெல்லாம் பண்பாயறிந்தநல்லோன்
பஞ்சாக்ஷரத்தைமிக்கப் பரிந்துசெபிக்கவல்லோன்
சுருள் பாசம்விடுத்தே பக்திமிகுத்தோன்
ஈசனிடத்தே நேசமிகுத்தோன் கண்

கண்ணுவர் கவி

பாதமேபணிந்துநின்ற பக்தியுள்ளசீஷமாரே
பூதலத்தில்சுகித்துவாழ்வீர் பரமனைக்கோரியானும்
நீதியாய்தவமேசெய்ய நல்லதோரிடமுமில்லை
சாதுயான்செல்லவேண்டும் சார்ந்துமேவருகுவீரே.

வசனம்

கேளும் சீஷர்களே! என் திருவடியை பணிந்தபடியால் ஆசீர்வதித்தேன். நான் பரமனைக்கோரி தவஞ்செய்யவேண்டும் சீக்கிரம் வருவீர் சீஷர்களே.

கண்ணுவர் தரு

தவஞ்செய்யநடந்தாரே கண்ணுவரிஷி
தவஞ்செய்யநடந்தாரே

தவஞ்செய்யநடந்தாரே தாணுவாம்ஈசனை
தாள்கண்டுவணங்கியே தாபசோபங்கெட தவ

காடுமலைவிட்டு கனத்தவழிதாண்டி
கங்கைக்கரைதொட்டு களித்தபொழிலண்டி தவ

மேருவின் சாரலின் மேன்மையாயிடங்கண்டு
சாரும்மோகம்நீக்கி சாந்தம்மிகக்கொண்டு தவ

அரகராசம்போ சங்கரனேஎன்று
திரமுடன்சொல்லியே உரம்பெறுவேனென்று தவ

விருத்தம்

இதுவென்னபுதுமையாக இந்ததோர்காட்டில்மிக்க
புதுமையாய்குழந்தையொன்று புலம்பியேஅழுகுதிந்த
சதுர்முகனமைப்போநாமும் சார்ந்துமேயின்னதென்று
அதுமுறையறியவேண்டும் அன்புடன்வருகுவீரே.

வசனம்

ஆனல் கேளுங்கள் சிஷர்களே! இதோ மேருமலைச்சார்பில் குழந்தைசத்தம் கேட்கிறது. பார்த்துவருவோம் வாருங்களப்பா சிஷர்களே.

கண்ணுவர் தரு

இதுவென்னவேடிக்கை சூக்ஷியோ இதைக்
கண்டோர்கண்காக்ஷியின் மாக்ஷியோ
கதிரவன்படாமல் காக்குதுசிறகினல்
சதுராய்குழந்தையை சகுந்தலைப்பக்ஷியே இது
கண்டேன்கண்டேன் தவஞ்செய்திட்ட அந்த
கௌசிகமுனிவருந் தந்திட்ட
காரிழையாகுமே கருவாகிப்பிறந்திட்ட
மேனகைமேவினள் மேதினியிட்டிட்டே இது

கண்ணுவர் வேறு தரு

ஆகாஎனதுசெல்வமே இந்த
ஆரண்யந்தன்னிலே வீரிட்டழுதிடும் ஆகா
தோகைபசுங்கிளி சுந்தரவதனமுள்ள
நாகரீகமுள்ளநாரி மேனகைசெல்வி ஆகா

கண்ணுவர் விருத்தம்

தவஞ்செய்யவேண்டிநானும் தனித்ததோரிடத்தைதேடி
இபம்பலவாழுமிந்த இடர்வனந்தன்னில்வந்து
சுபவடிவானபிள்ளை சுந்தரவடிவங்கண்டேன்
விபத்துக்கள்நேராவண்ணம் விரும்பியேவளர்த்தல்நன்றே.

வசனம்

கேளுங்களப்பா சிஷர்களே! நாம் முக்கண்ணனுகிய பரமக்கடவுளை நாடி தவஞ்செய்ய வந்தோம். அவர் கிருபையாலே அனுதியாய் குழந்

தையைக் கண்டோம். இந்தக் குழந்தையைக் கவனிக்கும்போது விஸ்வாமித்திருக்கும் மேனகைக்கும் பிறந்த பெண்ணுகத் தெரிகிறது. ஆதலால் இதை ஆசிர்மத்திற்கு எடுத்துச்செல்லுவோம் வாருங்களப்பா சிஷர்களே.

கண்ணுவர் தரு

ஆசிர்மம்நாடிச்சென்றுரே கண்ணுவமுனி
ஆசிர்மம்நாடிச்சென்றுரே
ஆசிர்மஞ்சென்றுரே அரிவையைக்கரத்திலேந்தி
பாசமுடனேகொண்டு பாவைதனைவளர்க்க ஆ

காடுசெடி தாண்டினர் சிஷர்களோடு
காடுசெடி தாண்டினர்
பேடைமயிலன்னம் பூஞ்சோலைவளமான
நாடியே ஆசிர்மம் ஓடியேவந்தாரே கா

கண்ணுவர் கவி

விந்தையாய்ஆசிர்மத்து வந்துமேசேர்ந்தோம்நாமும்
அந்தமாய்சகுந்தங்கூடி அரிவையைக்காத்ததாலே
சுந்தரிநாமதேயம் சகுந்தலையென்றுவைத்தேன்
சந்தோஷமாகமாதை சீக்கிரம்அழைத்துவாரும்.

வசனம்

கேளுங்களப்பா சிஷர்களே! நமது ஆசிர்மம்வந்துசேர்ந்து இச்செல்வியை சகுந்தலைப்பக்ஷிகாப்பாற்றியபடியால் சகுந்தலையென நாமகரணஞ் சூட்டினேம். இப்பொழுது செல்வியற்கு தக்க வயதுவந்து ஆசிர்மத்திலிருக்கிறது. ஆதலால் நான் அழைத்ததாக சீக்கிரம்அழைத்துவருவீர்.

பொது வசனம்

இவ்விதமாக கண்ணுவமுனிவர் சகுந்தலையை அழைக்க, சகுந்தலை கொலுவுக்கு வருகிறவிதங் காண்க.

சகுந்தலை வருகிற விருத்தம்

சந்தனம்புனுகணிந்து சார்ந்ததோர்பட்டுடுத்தி
விந்தைசேர்அணிகலன்கள் வேண்டியவாறுபூண்டு
தந்தையைக்காணவேண்டி தையலாருகில்சூழ
சுந்தரசகுந்தலையுஞ் சொகுசுடன்வருகின்றுளே.

சகுந்தலை தரு

சந்திரமுகவதனி சரசமொழிவதனி
சகுந்தலைமாதுவந்தாள் தந்தையைக்காண
சகுந்தலைமாதுவந்தாள்

சாதிமல்லிகைமுல்லை சார்ந்தகுழலின்வாசம்
சம்பங்கியெண்ணையோடு சரசமுடனேவீச
சுருள் சற்குணமுள்ள சத்தியமாது
பொற்புடைமாதர்கள் மெச்சிடும்மாது சங்

அன்னநடையுடைய பின்னல்சடையுடையாள்
சின்ன இடையுடைய கன்னல்மொழியுடையாள்
சுருள் கட்டழகாகிய காரிழைநல்லாள்
பொட்டெனமுலையாள் வட்டவிழியாள் சங்

பட்டுபட்டாடைதுன்ன பதக்கம்மார்பினில்மின்ன
பசியவளைகரத்தில் பலவிதமாகத்துன்ன
சுருள் பச்சைப்பசுங்கிளி பயிலுங்கலையாள்
இச்சைவிளைத்திடு மின்பநிலையாள் சங்

கழங்கு அம்மானைகொண்டு கலந்துசேடியரோடு
இழைத்துசிற்றில்பல இனிதாய்விளையாடும்
சுருள் இன்பம்பெருகிய இளையசிங்காரி
துன்பமுற்றிட ஒழுகுமொய்யாரி சங்

சகுந்தலை தரு

தந்தையேசரணம் உன் பாதாரவிந்தமேசரணம்
பந்தமாய்பாவையாள் பன்மலரெடுத்துமே
அந்தமாய்திருவடி அன்புடன்போற்றினேன் தங்

கண்ணுவர் தரு

வாழ்குவாயம்மா புவிமீது தாழ்வின்றிசெம்மர்
தயங்கிடவேண்டாமே தைபலரோடுநீ
பயமின்றிவிளையாடி பண்புடனிருப்பாயே வா

சகுந்தலை விருத்தம்

பண்புடனிருப்பாயென்று பாசமாய்சொன்னதாலே
கண்ணியமாகஎங்கு கருதிநீர்செல்லப்போறீர்
ஒண்டியாய்இருக்கமாட்டேன் உணர்வுமேகலங்குதிப்போ
வண்மையாயின்னதென்று வகுத்துரைசெய்குவீரே.

வசனம்

கேளும் தந்தையே! நீர் எவ்விடம்போவதற்கு பயணமாக இருக்கின்றீர். அடியாள் தனித்திருக்க ஞாயமா? சொல்லுங் தந்தையே.

கண்ணுவர் தரு

சதாநந்தர்அழைத்ததால்மங்கையே யானும்
சார்ந்துவருகிறேன் இங்கையே

சாற்றுபயமின்றி சந்தேகங்கொள்ளாமல்
உற்றுஇருந்திடு ஒன்றுமேவிள்ளாமல் சதா

சகுந்தலை தரு

கரடிபுலிசிங்கம்காட்டானை மெத்த
கர்ச்சிக்கஇருக்கவும்மாட்டேனே
காதலாய்வளர்த்துமே காட்டில்விட்டுஏக
ஆதரவில்லையேஐயோ நானென்செய்வேன் கா

கண்ணுவர் தரு

ஆசிர்மந்தனிலேஅம்மணி சுகமாய்
அம்மணிஇருந்திடுங்கண்மணி
பாசமாய்நான்சென்று நேசனைக்கண்டுமே
பண்புடன்வருகிறேன் பிரியமாய்விண்டுமே

சகுந்தலை தரு

சென்றுவருவீர் தந்தையே சதானந்தர்
சிந்தைமகிழவே விந்தையே
அன்புடன் விளையாடி ஆசிர்மந்தனிலே
கன்னியும்வருகிறேன் கருத்துடன் முன்னிலே சே

கண்ணுவர் கவி

மல்லிகைமுல்லைசூடி மாரனுங்கண்டுவாட
நல்லதோர்அழகுவாய்ந்த நங்கையேகேளாயம்மா
அல்லலொன்றணுகிடாது ஆசிர்மந்தனிலிருப்பாய்
பல்கலையுணர்ந்தமுனி பாசமாய்சென்றுவாரேன்.

வசனம்

கேளுமம்மா செல்வியே! ஆசிர்மத்தில் பத்திரமாகத்தானே வீற்றிருப்பாய், நான் சதானந்தரைக் கண்டு சீக்கிரம் வருகிறேன் செல்வியே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் சதானந்தரோடு கண்ணுவமுனிவர் சகுந்தலையை தனியாகவிட்டு சென்றிருக்க, இப்பால் அஸ்தினபுரி பட்டணம் நீலமகாராஜன் புதல்வனுகிய துஷ்டியந்த மகாராஜன் கொலுமுகம் வருகிறவிதங் காண்க.

## துஷ்டியந்தராஜன் வருவது

விருத்தம்

மணிமகுடம் சிரத்தில் தகதகென்ன
மார்பினில் பதக்கமது பளபளென்ன
கணிகையர்களிருபுரமுங் கவரிவீச
கண்டுமே சிற்றரசர் வணங்கிபோற்ற

அணியணியாய் கரிபரி சேனைசூழ
அந்தமுள்ள வில்லம்பு கரத்திலேந்தி
துணிவுடைய மந்திரிமார் நீதிகூற
துஷ்டியந்த ராஜனுமே வருகின்றாரே.

துஷ்டியந்தன் தரு

சந்திரகுலத்தில்வந்த விந்தையுள்ளநீலன்மைந்தன்
துஷ்டியந்தராஜன் வந்தேன் கொலுசம்ப்ரமதமாகவே
துஷ்டியந்தராஜன் வந்தேன்

பந்திபந்தியாய்மாதர் பரதநாட்டியமாட
அந்தமழகுடைய அரிவைகள்கவரிபோட
சுருள் ஆசையாய்பல அரசர்கள்வணங்கிட
அந்தணரிருடிகள் ஆசீர்வதித்திட சந்

தங்கமகுடச்சென்னி தகதகதகவென்ன
தாளங்கின்னரிகொட்டவே தகுதிகுதகுவென்று
தாளங்கின்னரிகொட்டவே

அங்கஜன்போலவே அழகில்மிகுந்ததீரன்
அறமதுசெய்திட பிரியமுள்ளவீரன்
சுருள் ஆரகேயூர கங்கணமின்னிட
சூரதீரர்கள் பேசியேபின்னிட சந்

காதில்பிரகாசமாய் குண்டலம்மிகசொலிக்க
கண்டுமாதரும்வாடவே மாரனேவென்று
கண்டுமாதரும்வாடவே

ஆதிமறையவர் ஆசீர்மிகவதிக்க
அன்பத்தாறுதேச மன்னர்வந்துதுதிக்க
சுருள் ஆகமவேத புராணமுணர்ந்தவர்
நாகரீகமாய் நல்மனதுள்ளவர் சந்

உம்பர்மனமகிழுங் கெம்பீரமுள்ளதீரன்
உரியமந்திரிசூழவே விந்தையதாகவே
உரியமந்திரிசூழவே

அம்புவியில்செம்மங் குப்பம்நகரில்வாசன்
அன்பருக்கன்பனான அன்பன்ஷண்முகதாசன்
சுருள் அருங்கவிதன்னையே விரும்பியேபாடி
பெருமையாய்புரவலன் வருகிறேன்நாடி சந்

துஷ்டியந்தன் கவி

வந்தனஞ்செய்துநின்ற மந்திரிமாரேகேளீர்
அந்தமாய்நமது அத்தி நகரமும்நாளுமிக்க

விந்தையாய்வளஞ்சுரந்து விரும்பியேகுடிகள்தானும்
குந்தகமின்றிவாழ்வு குலாவியேஇருக்கின்றாரா.

## (தேச விசாரணை)

தரு

மாதமும்மாரி மழைகளும்பெய்து மானிலம்சுகந்தானு
மந்திரி பூதலம்சுகந்தானு
நிதியாயெனக்கு மந்திரிமார்களே நேர்த்தியாய்சொல்லுவீரே
மிக பூர்த்தியாய்சொல்லுவீரே மா

ஆலயபூசை காலந்தவறாமல் அன்புடன்நடக்கின்றதா
மந்திரி இன்பமாய்நடக்கின்றதா
சீலமாயெனக்கு சந்தேகமில்லாமல் சொல்லுவீர்மந்திரியே
நீங்கள் புல்லுவீர்மந்திரியே மா

அந்தணர்செய்கின்ற யாகாதிகருமம் அவரவர்செய்கின்றாரா
தினம் தவறாமல்செய்கின்றாரா
சந்தேகமில்லாமல் அந்தவிதமதை சாற்றுவீர்மந்திரியே
இப்போ நேர்த்தியாய்மந்திரியே மா

கணவனைதெய்வமாய் கற்புள்ளமாதர்கள் கருதிபணிகின்றாரா
அவர் தொழுதுவருகின்றாரா
குணமுடனெனக்கு மந்திரிமார்களே கூறுவீர்கூறுவீரே
மிக கூறுவீர்கூறுவீரே மா

துஷ்டியந்தன் கவி

திருவோங்கஅஸ்தினபுரி தழைக்கவேமாதமும்மாரி
வருணனும்வருஷித்து வருகவும்குடிபடைகள்
கருத்தொடுவாழ்வதாலே களிப்பினையடைந்தேன்யானும்
பெருமையாய்கொலுவில்மிக்க பேசியேவீற்றிருப்போம்.

வசனம்

ஆனல் கேளுங்கள் மந்திரிமார்களே! அத்தினபுரிநகரம் செழித்தோங்கி குடிபடைகள் க்ஷேமம்பொருந்தி யிருப்பதால் சந்தோஷங்கொண்டேன் கொலுவாக வீற்றிருப்போம் மந்திரிமார்களே.

பொது வசனம்

அகோமெதப்படியென்றால் துஷ்யந்தராஜன் கொலுவாக வீற்றிருக்க, குடிகளிட்ட பயிரை மிருகங்கள் அழித்துவிடுவதால் அரசனைக் காண குடிகள் வருகிறவிதங் காண்க.

### குடிகள் வருகிற கவி

இப்படியரசன் தானும் இருக்கின்றவேளை தன்னில்
வெப்புள்ளகுடிகள் தானும் விட்டதோர்பயிர்கள்யாவும்
கப்பியேமிருகஜாதி கடுகிவந்தழிப்பதாலே
துப்புள்ளமன்னன் தன்னை தொழுதடிபணியவாரார்.

## குடிகள் வருவது

### தரு

குடிகள்நாங்களே பயிரிடுங் குடிகள்நாங்களே
குடிகள்வந்தாரே மன்னனைக்காணவே
துடுக்காய்நடந்து முடுக்காய்வகி குடி

என்னசெய்வமடா அண்ணன் தம்பிமாரே
இட்டபயிரெல்லாம் பாழாய்ப்போச்சுதடா
வகியேமன்னனை காணுவோமடா குடி

கரடிபுலிசிங்கம் காட்டானைபன்றியும்
காப்பாற்றியநல்ல பயிர்கள்யாவையும்
முரட்டுத்தனமாக மூண்டுவந்தழித்ததே குடி

அந்தமாய்யாவரும் விந்தையாய்கூடியே
அரசனிடஞ்செல்வோ மனைவரும்நாடியே
குந்தகமில்லாமல் கூறுவோம்ஓடியே குடி

### குடிகள் விருத்தம்

அண்ணலேராஜமன்னா ஐயையோஎன்னசெய்வோம்
வண்ணமாய்குடிகள்யாவும் உம்மையேநாடிவந்தோம்
மண்ணில்கீர்த்திவாய்ந்த மகாராஜாவுந்தன்பாதம்
திண்ணமாய்குடிகள்மிக திருவடிபணிந்திட்டோமே.

### வசனம்

ஆனல் கேளும் அரசே! உம்முடைய திருவடிக்கு குடிகள் யாவரும் அநேக நமஸ்காரம் செய்தோம் அரசே.

### துஷ்டியந்தன் கவி

வந்தனஞ்செய்துநின்ற விந்தைசேர்குடிகளேகேளீர்
இந்தவோர்வுலகந்தன்னில் என்றுமேசுகமாய்வாழ்வீர்
குந்தகப்பட்டுநீங்கள் கூடியேவந்ததென்ன
சந்தேகமில்லாமல் சாற்றுவீர்சாற்றுவீரே.

### வசனம்

ஆனல் கேளுங்கள் குடிகளே! என் பாதம் பணிந்தபடியால் அனைவரும் சுகமாக வாழ்குவீர். நீங்கள் வந்த விசேஷத்தை யுரைப்பீர் குடிகளே.

குடிகள் தரு

என்னவென்று சொல்லப்போறோம்
என்னரசே ஐயோ என்னரசே நாங்கள்
இட்டபயிர்களெல்லாம் பாழாய்போச்சே என்

மன்னவுன்வாக்குப்படி செலுத்திவந்தோம்
கப்பம் செலுத்தி வந்தோம் இப்போ
மாசுல்அழிந்ததாலே மனதுநொந்தோம் என்

காடிபுலிசிங்கம் வந்தழிக்குதே
பயிரை வந்தழிக்குதே நாங்கள்
துரத்தப்போனால்எங்களையும் வந்தெதிர்க்குதே என்

திறமுள்ளபுலியொட்டை கோளரியும்
ஐயா கோளரிகளும் அவை
எங்களைமிரட்டுதே நாய்நரியும் என்

துஷ்டியந்தன் கவி

கெஞ்சியேபுலம்பவேண்டாம் குடிகளேகேளுமிப்போ
அஞ்சாதபுலிசிங்கம் அனைத்தையுமழிக்கச்செய்வேன்
சஞ்சலமில்லாமலிப்போ தடியுலக்கைஈட்டிவாளும்
அஞ்சாமல்எடுத்துவாரும் அடவியில்வேட்டையாட.

வசனம்

ஆனால் கேளும் குடிகளே! நீங்கள் சஞ்சலங்கொள்ளவேண்டாம். இதோ சென்று மிருகங்களை கொன்றுவிடுகின்றேன். அதற்குள்ள ஈட்டி யுலக்கை வலை இன்னும் அநேக ஆயுதங்களை எடுத்துவருவீர்கள்.

## துஷ்டியந்தன் வேட்டையாடுவது

தரு

வேட்டையாடுவோம்வருவீர் நல்ல
விந்தையில்மிகுந்தசுந்தரவீரரே வே

வேட்டையாடுவோம்வாரும் காட்டதையடைந்துமே
காட்டுமிருகந்தனை நாட்டியேபாணத்தாலே வே

ஆகாபோகுதுபாராய் விலங்கினங்கள்
வேகமாகவேநேராய்
ஓகோகோவிடாதீர் எகியேதுரத்துவீர்
ஆகாமிருகந்தன்னை அடிக்கிறேன்மடிக்கிறேன் வே

அடர்ந்தகானகந்தன்னிலே மிருகஜாதி
தொடர்ந்துபோகுதேமுன்னிலே
மடமடவென்றுவோடும் திடமுள்ளசிங்கத்தை
துடிக்கவேவாளினால் மடிந்திடவடித்தேனே வே

துஷ்டியந்தன் விருத்தம்

மந்திரிமாரேகேளீர் மான்சிங்கம்கரடிதன்னை
சிந்தையுந்தான்கலங்க சீக்கிரம்மடித்துபோட்டேன்
அந்தமுள்ளஎனக்குதாகம் அதிகமாய்எடுக்குதிப்போ
சந்தோஷமாககெங்கை தீர்த்தமுமருந்துவோமே.

வசனம்

ஆனால்கேளும் மந்திரிமார்களே! கானகமிருகஜாதிகளை வேட்டையாடி ஓர்மானைக்கண்டு துரத்திசென்றபடியால் அந்தமான் அகப்படாமல் பாலைவனத்திற்செல்ல அந்தவனத்தின் வெப்பத்தால் நாவானது வரளுகின்றது. கெங்கையில் ஜலமருந்தி சயனித்திருப்போம் மந்திரி.

பொது வசனம்

அகோ தெப்படியென்றால் துஷ்டியந்தன் களை மேலிட்டு நதியில் ஜலமருந்தி சயினித்திருக்கும்போது சகுந்தலை இன்னங் கண்ணுவ ரிஷி வரவல்லை என்று சொல்லுகிறவிதங் காண்க.

O-1892 MSH
N34

சகுந்தலை விருத்தம்

என்னநான்செய்வேனேயோ எந்தனைவிட்டுமேதான்
அன்புள்ளதந்தையவர் அருமுனியோடுசென்றார்
இன்னமும்வரவுங்காணேன் இவ்வனமிருகஜாதி
பன்னியேகெர்ச்சிப்பதால் பயமிகக்கொள்ளுதையோ.

வசனம்

ஆ தெய்வமே! என் தந்தையாகிய கண்ணுவர் சதானந்தரை காணச்சென்றவர் இன்னம் வரவில்லை. கானகமிருகம் கர்ச்சிக்கும் சப்தத்தால் என்மனம் கலங்குதே என்செய்வேன் தெய்வமே.

துஷ்டியந்தன் தரு

செல்லுவோம்வாராய் ...ரம்
செல்லுவோம்வாராய்
செல்லுவோம்வாருங்கள் ...திவிட்டு
சேருவோம்வாருமே நம்பதிதனை ...தாட்டு செ

இந்தவனமே கண்ணுவரிஷி இருந்திடும்வனமே
அந்தமாய்முனிவர் ஆசிரமங்கண்டோம்
சுந்தரமந்திரிதங்கி இரு...விண்டேன் செ

85997

துஷ்டியந்தன் கவி

வருபொருளறிந்துரைக்கும் வல்லமைமந்திரிமாரே
கருதியதவத்தைசெய்யும் கண்ணுவர்ஆசிரமத்தில்

ஒருவரும்ஏகொணுது உத்தமாவீற்றிருப்பீர்
விரும்பியேஆசிரமத்தில் வேந்தனும்சென்றுவாரேன்.

வசனம்

ஆனுல் கேளும் மந்திரிமார்களே! இதோ இருக்கிற வனத்தை யாருடையதென்று முனிவர்களைக் கேட்டேன். இது கண்ணுவராசிரமம் என்றனர். அங்கு யாவரும் செல்லப்படாது. நீங்கள் இவ்விடம் இருங்கள் நான்தனிமையாக சென்று வருகிறேன் மந்திரிமாரே.

## துஷ்டியந்தன் நந்தவனச்சிறப்பு

தரு

இந்தவனத்தின் சிங்காரம்
நான்எங்குமேகண்டதில்லை இவ்வுலகமதில்
எழில்பெரும்பூஞ்சோலை ரீங்காரம் இங்

சிந்தைகலங்குதே செவ்வந்திமல்லி
சீர்பெறத்தழைத் தோங்கிடுங்கதலி
மந்தாரைரோஜா மனமிகவீசுதே
மாவிளாபலா பார்க்கக்கண்கூசுதே
மாமயில்அன்ன சாயல்நடையும்
மாடப்புருக்கள் சோடியாய்பாடுதே இங்

துஷ்டியந்தன் கவி

இந்தஜோர்வுலகில் இம்மாதைப்போலவேறு
அந்தமாய்மாதுதன்னை அயனுமேபடைக்கமாட்டான்
குந்தகம்நேருமே கோதைமேல்மோகங்கொண்டால்
சுந்தரிஇன்னுளென்று சென்றுமேதெரிந்துக்கொள்வேன்.

வசனம்

ஆஹா! இந்த மாதைப்போல் யான் பார்த்ததுமில்லை. அயனும் இனி இம்மாதைப்போல் படைக்கப்போகிறதுமில்லை. முனி ஆசிரமத்தில் மாது இருப்பதால் இன்னுரென்று கருத்தையறிந்து அதன்பின் யோசிக்கலாம்.

சகுந்தலை விருத்தம்

மதிமுகவதனமுள்ள மாரனைப்பழித்தமிக
நிதிதனைப்படைத்துமிக்க நேர்த்தியாய்ச்செங்கோல்செய்யும்
பதிதனில்சிறந்தமன்னு பாசமாய்வீற்றிருக்க
சதிருடனுசனந்தான் தந்தேனேஅமருவீரே.

வசனம்

ஆனுல் கேளும் இராஜமன்னனே! இதோ ஆசனந்தந்தேன் அமருவீர் மன்னனே.

துஷ்டியந்தன் தரு

கண்ணுவமுனிவரைக்காணேமே அவர்எங்கேசொல்லும்
கண்ணுவமுனிவரைக்காணேமே
கண்ணுவமுனிவரெங்கே வண்ணமுள்ளமாதரசே
உண்மையைஎந்தனுக்கு உரைத்திடுவாய்நேசி க

சகுந்தலை தரு

சொல்லுவேன்கேளும்மன்னனே விவரவாகவேநானும்
சொல்லுவேன்கேளும்மன்னனே
சொல்லுவேன்கேளும்மன்ன சதானந்தரைக்காண
சென்றனர்தனித்து சீக்கிரம்வரவுங்காணேன் சொ

துஷ்டியந்தன் தரு

மாதேதனித்துஇங்கையே நீயிருப்பதென்ன
மாதேதனித்துஇங்கையே
கோதையேயுந்தனுக்கு கண்ணுவர்என்னவேண்டும்
பேதகமில்லாமலே ஓதுவீர்எந்தன்முன்னே மா

சகுந்தலை தரு

கண்ணுவமுனிவர்எந்தன்தந்தையே அறிவீர்மன்ன
கண்ணுவமுனிவர்எந்தன்தந்தையே
வண்ணமுள்ளஎந்தன்பெயர் வகுத்துரைப்பேன்கேளும்
திண்ணமாய்சகுந்தலை தெரிவித்தேன்பேரைநாளும் க

துஷ்டியந்தன் விருத்தம்

அப்படியானலிப்போ அரிவையேசொல்வேன்கேளும்
கப்பியவேதமோதுங் கண்ணுவமுனிவருக்கு
எப்படிசெல்வியாக வந்திழையவதரித்தாய்
துப்பதையெந்தனுக்கு சொல்லிடவேண்டும்பெண்ணே.

வசனம்

ஆனல் கேளும்பெண்ணே சகுந்தலையே! நீ கண்ணுவமுனிவருக்கு புத்திரி என்றுயே; நீ எவ்விதமாக அவருக்கு புத்திரியானய்? அல்லது உன் தாய் தந்தை வேறு யாராவது இருக்கின்றார்களா? நீ எந்த விபரமும் தெளிவாகச்சொல்லும் பெண்ணே.

சகுந்தலை சிந்து

சதானந்தர்க் குரைத்தபடி தந்தையவர்
தையலாள்வரலாற்றை சொல்லுகிறேன்நாடி
அதிககோபமுள்ள கௌசிகர்
அரனையேகோரிதவம் மேருகிரியில்

அந்தமாய்செய்திடவே தேவலோகம்
அக்கினிசுவாலை வீசிடவே
இந்திரன் தான்பார்த்து தேவருக்கு
இடுக்கம்நேருமென்று மனம்பூர்த்து
சுந்திரவடிவமுள்ள மேனகையை
அந்தமாய்முனிவன் தவம் அழித்திடவே
தந்துமேவிடையனுப்ப மேனகை
தவமுனிவரிட தபசழித்து
இருவரும்மோகங்கொண்டு தழுவி
இன்பசுகமதை மிகத்தானடந்து
பரிவுள்ளபெண்குழந்தைதஜனிக்க அதை
பார்த்துமேஇருவரும் போட்டார்தனிக்க
வண்ணமாய்சகுந்தலையெனும் பக்ஷியது
வஞ்சியைப்பாதுகார்த்து வருகும்போது
கண்ணுவமுனிவர் தானும் தவஞ்செய்ய
கருத்தாய்போனவர் கண்டுமேஅங்கே
அன்புடன்எடுத்துவந்து மாதை
அருமைபெருமையுடன் தான்வளர்த்து
கன்னியர்தனக்குப்பேரு சகுந்தலை
காரிகையென்றுநாமம் வைத்தனர்சீறு
அந்தஜோர்மாதும்நானே வளர்த்தார்
அன்புள்ளகண்ணுவர் செல்வியாள்தானே
எந்தன்வரலாறுஇதுவே கருத்தை
எடுத்துரைத்தேன்மன்னு தெரிந்திடுவாய் தந்தினம்.

துஷ்டியந்தன் தரு

சந்தோஷங்கொண்டேனே மங்கையே எந்தனை
சேர்ந்துசுகந்தாரும்நங்கையே
உந்தனுக்கேற்ற உற்றபுருஷன்நானே
எந்தனைசேர்ந்திட வந்திடுவாய்மானே சந்

சகுந்தலை தரு

அரசனேநீயெந்தனூரு எனக்கு
அறிவிப்பாயுந்தன்பேரு
சரிவரவேயுந்தன் சாதிமதந்தன்னை
சந்தேகமில்லாமல் சொல்லிடுவாய்முன்னே அ

துஷ்டியந்தன் தரு

அத்தினபுரிக்கதிபனே நீலராஜன்
அன்புடனளித்திட்டபுதல்வனே

அரைகுவேனென்பெயர்   துஷ்டியந்தராஜனே
அன்னமேவுனக்கு   ஏற்றதோர்புருஷனே   அ

சகுந்தலை தரு

தந்தையுங்கொள்ளுவார்கோபமே   என்னை
சிந்திக்கவேண்டாமனஸ்தாபமே
குந்தகம்நேருமே   தந்தையும்வருவாரே
உந்தன்நகருக்கு   விந்தையாய்சேருமே   தந்

துஷ்டியந்தன் கலிவிருத்தம்

சந்திரபிம்பம்போன்ற சகுந்தலைவஞ்சியாளே
இந்ததோர்வேளைதன்னில் எதுக்குநீயும்வீணாய்
நொந்துமேமொழிகள்தன்னை நோக்கியேயுரைக்கின்றாய்நீ
உந்தனுக்கழகுமல்ல உதயசந்திரன்போன்ற.

தரு பல்லவி

விந்தையில்மிகுந்த   சுந்தரி
வீணானமொழிகளை   ஏனோவுரைக்கின்றாய்
எந்தனைத்தேடுவார்   மந்திரி

அநுபல்லவி

வந்துமேயெந்தனருகில்   சுந்தரியேமுத்தந்தாரும்
வாதைசெய்யாமலே   நீரும்   அடி
விந்தையுள்ளமதன்   தொந்தரவுசெய்கிறான்
வஞ்சனைசெய்யாதே   வாரும்   ஆ
உந்தனைப்போலமாது   இந்தவுலகிலில்லை
உத்தமமானமொழி   கூறும்   இனி
சந்தேகங்கொள்ளாமலே   சிந்தைமகிழ்ச்சியுடன்
சித்திரமேயெந்தனைச்   சேரும்   இங்கு
வந்துசும்மாஉந்தனை   கலவிசெய்யாமலே
சுந்திரனும்போகமாட்டேன்   விந்

சகுந்தலை தரு

மன்னாஉமக்கழகோ   என்னாஎந்தன்மீது
இன்னாள்மோகமிஞ்சாதே
மன்னாயுமக்கனேக   மார்க்கமுறைத்திருந்தும்
கன்னியாள்மீதுகாதல்   கொள்ளவேண்டாந்தெரிந்தும்   ம

துஷ்டியந்தன் தரு

மானே இதுசமையந்தானே   தடுத்திடாதேதேனே
நானேமிகவும்நொந்தேனே

வானோர்புகழும்மாதே வாட்டுறான்மதன்பாவி
தேனுனஇதழ்தந்து சேர்ந்திடவாரும்தாவி மா

சகுந்தலை தரு

ஆவிபோகுமேசெல்லும்பாவி தந்தைவருவார்தாவி
மேவிபதிக்குச்செல்லுமே
பாவையாள்எந்தனிட பதிவிரதைகெடுமே
பாரோர்கள்எந்தனை பழுதாய்சொல்லப்படுமே ஆ

துஷ்டியந்தன் கவி

மங்கையேசொல்வேன்கேளு மணமதுஎட்டுவகையே
நங்கையேபிரமம் நவிலுவேன்பிரசாபத்தியம்
அங்கிலாஆரிஷ்டம்தெய்வம் அசுரம்காந்தர்வம்
இங்கிதராக்ஷதம் அறிகுவாய்பைசாசம்தானே.

வசனம்

ஆனால் கேளும்பெண்ணே! திருமணம் எட்டுவகைப்படும். அவை யாதென்றால் பிரமம்-பிரசாபத்தியம்-ஆரிடம்-தெய்வம்-காந்தர்வம்-அசுரம்-இராக்கதம்-பைசாசம். அவற்றுள் பிரமச்சாரிக்குக் கன்னிகையைக் கொடுப்பது பிரமமணம், தலைமகனினத்தார் வேண்டத் தலைமகளினத்தார் உட்பட்டு அவளை தீமுன்னே கொடுப்பது பிரசாபத்தியமணம், ஒன்றிரண்டு பசுவும் எருதும் வாங்கிக்கொண்டு நங்கையை தீமுன்னர் கொடுப்பது ஆரிடமணம், வேள்வியால் வந்த பெண்ணை அக்கினிமுன்னர் கொடுப்பது தெய்வமணம், கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவரும் தனிவிடத்தெதிர்ப்பட்டு தாமேகூடுவது காந்தர்வமணம், பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தாருக்குப் பொன் வேண்டுவதைக் கொடுத்துக் கொள்வது அசுரமணம், பெண்ணும் பெண்ணினத்தாரும் உடன்படாமல் வலிதிற் கொள்வது இராக்கதமணம், துயின்றாளைச் சென்று கூடுவது பைசாசமணம். இவற்றுள் காந்தர்வமணம் நாம் செய்துக்கொள்ளலாம் பெண்ணே.

சகுந்தலை கந்தார்த்தம்

கந்தருவமணத்தினாலே காதலாய்கலப்பேனென்ற
சுந்தராயென்வயற்றில் சூரனாய்பிறந்தபிள்ளை
இந்ததோர்தலங்களெல்லாம் எழில்பெறஆள்வானென்றே
முந்தவேசாக்ஷிவைத்து,

தரு

எந்தனுக்குசத்தியந்தாருமே கவலைவேண்டாம்
சந்தோஷமாய்இங்குவாருமே
அந்தமாயத்தினபுரியை ஆண்டிடும்ராஜமன்னா
தந்திடுவீர்சத்தியம் தடைசெய்யாமல்முன்னே எந்

துஷ்டியந்தன் சந்தார்த்தம்

இன்றுமுதல் எனக்குமே நீயும்பாரி
இதற்கொரு சந்தேகப் படவேவேண்டாம்
அன்புடனே யுன்வயற்றி லுதிக்காநின்ற
அதிவீர மைந்தனுக்கே நான்
உன்னித உலக மெல்லாம்
உரியதாய் பட்டந் தாரேன்
நன்னைய பூமிவாணி சாக்ஷி,

தரு

மன்னனும்சத்தியம்செய்தேனே மனமகிழ்ந்து
பின்னமில்லாமலுய்தேனே
உன்னிதமுள்ளபெண்ணே அன்புடனேகாந்தர்வவிவாகம்
அரிவையேசெய் துகொள்ளு ஆகாவெல்லுவேன்மோகம் மன்

சகுந்தலை தரு

கன்னியைச்சேரவாருமே நல்ல
காதல்கொண்டமன்னவரே பேதகமில்லாமலே
கன்னியைச்சேரவாருமே
மன்மதன்விடுக்கணையால் மார்பதுஉருகுதே
மனமதுமிகவும்நொந்து மயக்கமுமாகுதே
மாரா பஞ்சணைக்குநாம்
சீராய் சென்றிடுவோம்
வாராய் எந்தன்முகத்தை
பாராய் இன்பசுகத்தை
தாராய் இதுசமயம் கன்

துஷ்டியந்தன் தரு

மதிமுகவதனசிங்காரி இந்த
மஞ்சத்தின்மீதிலே கொஞ்சிவிளையாடுவோம்
அதிகசுந்தரஒய்யாரி
பதிவிரதாதன்மையும் பாசம்மிகுந்தபெண்ணே
வடிவில்மாரன்மயங்கும் விந்தையுள்ளகண்ணே
வாடி தியங்கிடாதே
நாடி மதன்சரத்தால்
கூடி இன்பமதை
தாடி இருவருமாய்
ஜோடி ஷண்முகன்பதம்
பாடி விளையாடினோம்
கூடி பிரியமாக மதி

துஷ்டியந்தன் கவி

அன்பினிற்குரியநல்ல அதிரூபவதியேமானே
இன்பங்கள் அனுபவித்தோம் என்னையேமந்திரிமார்கள்
பன்னியேதேடிப்பார்ப்பார் பார்வனந்தன்னிலேதான்
கன்னியேவிடையளிப்பாய் களிப்புடன்சென்றுவாரேன்.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! உன்னோடுகூடி யனுபவித்தசுகம் போதும். மந்திரிமாரை விட்டுவந்தேன் தேடுவார் விடைதாரும் சென்றுவாரேன் பெண்ணே.

சகுந்தலை தரு

எந்தனை தனிக்கவிட்டு எப்படிநீரும்செல்வீர்
எந்தன் மனமும்வாடுதே எந்தன்நாதா
சிந்தைமிகநாடுதே

துஷ்டியந்தன் தரு

மந்திரியாலேவுன்னை வந்துயழைத்துச்சென்று
மாதேஅரசுபுரிவண்டி எந்தன்பெண்ணே
கோதேவிடையுங்கொடடி

சகுந்தலை தரு

சொன்னவாக்கைதவறி என்னை இங்கேயேவிட்டு
சுந்திரா இருந்துவிடாதீர் எந்தன்நாதா
வந்துஅழைத்துப்போவீர்

துஷ்டியந்தன் தரு

பூவும்நாரும்போல பொருந்திஇருந்தோம்மாதே
பூவையேவுன்னைவிடுவேனு மனந்துணிந்து
தேவியேவுன்னைவிடுவேனு

துஷ்டியந்தன் கவி

பஞ்சுமெல்லடியையொத்த பாவையேசொல்லக்கேளாய்
சஞ்சலங்கொள்ளவேண்டாம் தையலேயிங்கிருப்பாய்
வஞ்சியேமந்திரியாலே வகையுடனழைத்துக்கொள்வேன்
கொஞ்சியேநகரந்தன்னில் கூடியேயிருக்கலாமே.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! இன்னுஞ் சிலகாலஞ்சென்று உன்னை மந்திரிமூலமாய் அழைத்துக்கொள்ளுகிறேன். நீ கண்ணுவ ராசிரமத்திலேயே யிருப்பாய் பெண்ணே.

சகுந்தலை விருத்தம்

அப்படியானால்நன்று அன்புள்ளபிராணநாதா
செப்பியவார்த்தைபோல சேயிழையிருப்பேனிங்கு
சுப்பியசிலநாளின்னங் கழிந்திடமந்திரியாலே
துப்புடன்அழைத்துசெல்வீர் தோகையும்போற்றிசெய்தேன்.

வசனம்

ஆனால் கேளும் பிராணபதியே! என்னை மறந்துவிடவேண்டாம். சிலநாட்கள் சென்றபின்னர் மந்திரி பிரதானிகள் மூலமாய் அழைத்துக் கொள்வீர் திருவடிக்கு அநேகவந்தனம் நாதர்.

பொது வசனம்

அகோதெப்படி என்றால் சகுந்தலையிடத்தில் துஷ்டியந்தராஜன் விடைபெற்று மந்திரிகளோடு நகரஞ்சென்றுவிட, சிலநாள் சென்ற பின் சதானந்தரைக் காணச்சென்ற கண்ணுவமுனிவர் ஆசிரமத்தை நாடி வருகிறவிதங் காண்க.

கண்ணுவர் விருத்தம்

சுந்திரவதனமுள்ள சகுந்தலைகண்மணியாளை
அந்தமாய்விட்டுவந்து அநேகநாளானதாலே
சிந்தையுமிகவேநொந்து சேயிழைதானிருப்பாள்
குந்தகம்நேருமுன்னம் கோதையைக்காணுவேனே.

கண்ணுவர் வசனம்

என் செல்வியாகிய சகுந்தலையை ஆசிரமத்தில் விட்டுவந்து அநேகநாளாகிறபடியால் ஏதேனும் துன்பங்கள் நேராமுன்னம் நான் சென்று பார்க்கவேண்டும்.

சகுந்தலை தரு

தந்தையேஉன்பாதம்போற்றினேன் சுந்தரிமாதும்
தந்தையேஉன்பாதம்போற்றினேன்

எந்தனை தனிக்கவிட்டு இத்தனைநாளாகவே
சுருள் எப்படியிருக்க மனமதுதுணிந்தீர்
வந்திழைதன்னை விட்டுமேபிரிந்தீர் தந்

கண்ணுவர் தரு

அம்மணிசுகமாய்வாழ்குவாய் என்பாதம்பணிந்ததால்
அம்மணிசுகமாய்வாழ்குவாய்

சும்மாநாளுமில்லாமல் எந்தனைக்கண்டுமனமகிழ்ந்தாய்
சுருள் எதுக்குநாணங் கொண்டாயம்மா
குதுவாதில்லாமல் சொல்லுவாய்சும்மா அம்

சகுந்தலை தரு

எப்படி துணிந்துசொல்லுவேன் தந்தையேஉனக்கு
எப்படி துணிந்துசொல்லுவேன்

மைப்பிடிகன்னிசெய்த தப்பிதத்தைப்பொறுப்பீர்
சுருள் மனமதுவாடுதே மெல்லியுஞ்சொல்லவே
மன்னிப்பீர்தந்தையே குற்றத்தைமெள்ளவே எப்

கண்ணுவர் தரு

தெரிந்துக்கொண்டேனே அம்மணி நீசெய்தவிதத்தை
தெரிந்துக்கொண்டேனே

சரிசரிஉந்தனிட சம்மதப்படியேசெய்த
சுருள் சங்கதிகளையே மங்கையேநீரும்
இங்குமேஎனக்கு யின்பமாய்கூறும் தெரி

சகுந்தலை விருத்தம்

தந்தையேசொல்வேன்கேளும் தாணிபுகழ் துஷ்டியந்தாராஜன்
வந்துமேமோகித்தென்னைக்கூடி வாக்கதுஅளித்தார்கேளும்
அந்தமாயென்வயிற்றுதிக்கும் ஆண்பிள்ளை தனக்குப்பட்டம்
சொந்தமாய்தருவதாக சொல்லியேகூடினரே.

வசனம்

கேளுந் தந்தையே அத்தினபுரி பட்டணத்தையாளும் துஷ்டியந்தாராஜன் என்னைக்கண்டு மோகித்தார். அதற்கு அநேக வசனங்கள் சொல்லியும் கேளாமல் அவர் என் வயிற்றிலுதிக்கும் மைந்தனுக்குப் பட்டத்தைக் கொடுப்பதாக ஆகாயவாணி பூமிதேவியை சாக்ஷிவைத்து என்னைக் காந்தருவ விவாகஞ்செய்து மறுபடி மந்திரிகளால் அழைத்துக்கொள்வதாக கூறிச்சென்றார் தந்தையே.

கண்ணுவர் விருத்தம்

உற்றதோர்வார்த்தைதன்னை உரைத்ததால்செல்வியாளே
மெத்தவேஉன்வயிற்றி லுதிக்கின்றமைந்தன் தானும்
இத்தரையுலகமெல்லாம் ஆண்டிடுந்தீரனவான்
சித்திபெறஆசீர்வாதம் செப்பினேனம்மா தாயே.

கண்ணுவர் வசனம்

கேளுமம்மா சகுந்தலையே! உன் வயிற்றிலிருக்கும் புத்திரன் இவ்வுலகத்தை யெல்லாம் ஆளும் கெம்பீரமுள்ள புத்திரனயிருப்பான் வாக்களித்தேனம்மா.

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் கண்ணுவராசிரமத்தில் இருந்துவருகிற காலத்தில் பத்துமாதமும் சென்றதால் சகுந்தலை கெற்பவேதனைப் படுகிறவிதங் காண்க.

### சகுந்தலை கொச்சகம்

என்னநான் செய்வேனம்மா என்னிடசேடிமாரே
பன்னுவேன் எனக்குப்பத்து மாதமுமானதாலே
கன்னியாளிடையுமெத்த கடுகெனக்கடுத்துநொந்து
குன்னவேவருத்தமது தோகைக்குஆகுதம்மா.

### வசனம்

ஆனால் கேளுமம்மா வனக்கன்னிகளே! எனக்கு மாதம்பத்தும் சரியானபடியால் பூரணகெற்பமாகி யிடையானது நோகிறதம்மா கன்னிகளே.

### சகுந்தலை தரு

என்னநான்செய்வேனடிகன்னிகளா அம்மாகன்னிகளா
எனக்குஇருதயம்நோகுதடிதோழிகளா அம்மாதோழிகளா

மடியகாலம்வந்ததோடிதோழிகளா அம்மாபாங்கிகளா
மயக்கந்தோணுதடிதோழிகளா அம்மாபாங்கிகளா என்

### சகுந்தலை வேறு தரு

பாலன்பிறந்தானம்மணி அழகுவாய்ந்த
பாலன்பிறந்தானம்மணி

பாலன்பிறந்தானம்மா சீலமுள்ளகந்தனைப்போல்
ஞாலமெல்லாம்புகழ பாலனவதரித்தான் பா

கண்ணழகும்மூக்கழகும் கன்னியேநானென்னசொல்வேன்
வண்ணமுள்ளஅத்தினபுரி மணிமுடிதரித்திட பா

### சகுந்தலை விருத்தம்

அந்தமாயெனைவளர்த்த அருந்தவந்தனில்மிகுந்த
சுந்திரத்தந்தையாரே சேயனும்பிறந்தான்பாரும்
அந்தமாயத்தினபுரி அரசதுபுரியவேண்டி
குந்தகமில்லாமல்நீரும் கூறுவீராசீர்வாதம்.

### வசனம்

கேளும் தந்தையே! என் வயிற்றில் மைந்தன் பிறந்தான் இதோ பாருந் தந்தையே.

கண்ணுவர் தரு

பாலனைப்போலவே இந்தப்
பாரினில்கிடையாதேகண்மணி

ஆலமுண்டோன்செயலால் அத்தினபுரிதன்னை
ஆளும்படியாய் ஆசீர்வாதமுந்தந்தேனே

சகுந்தலை தரு

ஆசீர்வதித்திட்ட தந்தையே பாலன் நல்ல
அம்சத்தில்பிறந்தானே தந்தையே

மாசிலா தயிந்த மைந்தனுக்குப்பேரு
பாசமாய்வைப்பீரே பண்புடனேசீரே

கண்ணுவர் தரு

பரதனென்றுஇவன்பேருமே நான்
பாசமாய்தந்தேனேசீருமே

காடிபுலிசிம்மம் கானகந்தன்னில்
திரமுடன்வைத்துமே அருமையாய்வளர்த்திடு

சகுந்தலை தரு

நல்லது தந்தையேகேளுமே செல்வன்
நாளும்வளர்ந்தானே ஆளுமே

செல்வனுக்குவித்தை சீக்கிரமாகவே
புல்லுவீரேநீரும் புகழ்ச்சியதாகவே நல்

கண்ணுவர் விருத்தம்

சந்திரவதனமுள்ள செல்வியேசொல்வேன்கேளும்
அந்தமாய்பரதனுக்கு ஐந்துவயதுமேஆனதாலே
விந்தையாய்தனுர்வேதந்தான் விளங்கவேபோதிக்கவேண்டி
சுந்தரபரதன்தன்னை சுகமுடன் அழைத்துவாராய்.

வசனம்

கேளுஞ் செல்வியே! பரதனுக்கு வயது ஐந்து ஆனபடியால் தனுர்வேதம் போதிக்க கருத்துக்கொண்டபடியால் பரதனை சீக்கிரம் அழைத்துவாரும் அம்மா செல்வியே.

பொது வசனம்

இவ்விதமாக சகுந்தலையானவள் தன்குமாரனான பரதனையழைக்க பரதன் தன் தாயாரைக் காணவேண்டி கொலுவுக்கு வருகிறவிதங் காண்க.

## பரதன் கொலுவுக்கு வருவது

### விருத்தம்

அரனிடம்வரத்தைப்பெற்ற அருந்தவமுனிவரான
உறம்பெருகும்கண்ணுவரால் உகந்துமேதனுர்வேதத்தை
திறமுடன்கற்கவென்று சீர்பணியலங்கரித்து
பரதனுந்தாயைக்காண பாசமாய்வருகின்றானே.

### பரதன் தரு

மாரன்வடிவமுள்ள தீரன் அன்னையைக்காண
மன்னன்பரதராஜன் வாரேன்

காரிகைமாதர்கள் கவரிகள்வீசிட
சுருள் கந்தனைப்போலவே சுந்தரசீலன்
அந்தமாதந்திர குலமுள்ளபாலன் மார

சித்ரமுடிமகுடமின்ன தகதகென்று
ரத்னபதக்கம்மார்பில்துன்ன

அத்தியுரித்தணிந்த ஆண்டவன்பாதங்கோரும்
சுருள் அருந்தவகண்ணுவ ராசிகள்கூற
வருந்தவமுனிவர்கள் புகழ்ந்துமேசூழ மார

அன்னையழைத்தசேதிதன்னை விபரமாக
இன்னதென்றறிந்திடமுன்ன

உன்னிதகாவில்தண்டை பன்னியேகீதம்பாட
சுருள் உத்தமன்தனுர் வேதமறியவே
பத்தியாய்வருகிறேன் பாசமாய்தெரியவே மார

### பரதன் தரு

அருமையுடனேஎன்னை வளர்த்தஐயாவே உந்தன்
திருவடிபணிந்துநின்றேன் காருந்துய்யாவே அ

### கண்ணுவர் தரு

வந்தனங்கள்செய்துநின்ற சுந்தரமைந்தா சுகமாய்
வையகத்தில்வாழ்ந்திருப்பாய் விந்தையாகவே வ

### பரதன் தரு

என்னை யன்பாயீன்றெடுத்த எந்தனன்னையே உந்தன்
எழில்பாதம்போற்றிசெய்தேன் காருமன்னையே

### சகுந்தலை தரு

பாதமதைபோற்றிசெய்த பாலனைவாரும் இந்த
பாரினிலேசுகமாக வாழ்குவாய்நீரும்

பாதன் தரு

என்னையின் றழைத்தசேதி யின்னதென் றுமே பதில்
அன்பாயுரைத்திட வேண்டும்இன் றுமே

சகுந்தலை கவி

ஆலத்தையுண்டசிவ ஆண்டவன்கிருபையாலே
சிலமாயெனக்குதித்த செல்வனே கேளுமப்பா
சாலவேமுனிவரிடம் தனுர்வேதமறிய வேண்டி
பாலனேயழைத்தேனுன்னை பாசமாயிருந்திடாயே.

வசனம்

கேளுமப்பா செல்வனே! அழைத்தகாரணம் என்னவென்றால் கண்ணுவமுனிவரிடம் தனுர்வேதம் கற்றுக்கொள்ளும் பொருட்டு அழைத்தேனப்பா மைந்தனே.

பாதன் கவி

வேதமாமறையுணர்ந்த விண்ணர்புகழுமைய்யா
பாதமேபணிந்துநின்றேன் பக்தியாயெந்தனுக்கு
தீதில்லா தனுர்வேதத்தை தெரிந்திடவிபரமாக
போதனைசெய்யவேண்டும் புனிதனும்போற்றிசெய்தேன்.

வசனம்

கேளும் குருநாதனே! எனக்கு தனுர்வேதந்தை தெளிய போதிக்கவேண்டும் ஐயனே. தங்கள் திருவடிக்கு அநேக நமஸ்காரம்.

கண்ணுவர் தரு

தொந்திவிநாயகனை கடவுளை
சிந்தனைசெய்குவாய்மோன
அந்தமாய்கௌசிகர் அளித்ததனுர்வேதம்
உந்தனுக்கோதுவேன் அறிந்துகொள்ளுநீதம் தொ

வசனம்

வாருமப்பா பாதனே! முதல்முதல் விநாயகக்கடவுளை தோத்திரம் பண்ணிக்கொள்ளுவாய். அதன்பிறகு விஸ்வாமித்திராலே உண்டாக்கப்பட்ட தனுர்வேதத்தின் முறையை தெரிவிக்கிறேன் அதிக கருத்தோடு அறிந்துகொள்ளுவாயப்பா பாலனே.

பாதன் தரு

முருகர்க்குமூத்தவனை யானை
முகத்தோனை துதிசெய்வேன் நானே
அறிந்திடஆயுத வகையென்னசொல்லுமே
அதற்கானபானையும் குறித்துமேபுல்லுமே மு

வசனம்

ஆதிகடவுளாகிய விநாயகமூர்த்தியை துதிசெய்து கொண்டேன். இந்த தனுர்வேதம் விஸ்வாமித்திரரால் ஏற்பட்டதென்றும் தெரியலானேன் ஆயுதம் என்பது எத்தனை வகைப்படும்.

கண்ணுவர் தரு

முக்தமமுக்தமேமுக்தா முக்தம்
யந்திரமுக்தமெனவே
யுக்தமாஞ்சதுர்வித மோதிடுஞ்சாதனம்
புரியமந்திரங்கள் தேவதையாதீனம்

வசனம்

முக்தம்-அமுக்தம் - முக்தாமுக்தம்-யந்திரமுக்தம் என நான்கு வகைப்படும். அவைகளின் மந்திரங்கள் தேவதைகளின் ஆதீனத்து உள்ளன.

பரதன் தரு

முஷ்டிநிலைகளையோதும் நாதா
இஷ்டமுடனேநீதம்
முஷ்டிநிலைக்கான மூர்த்திகள்பேதமே
கஷ்டமில்லாமலே கழறுவீர்நீதமே

கண்ணுவர் கவி

சந்திரகுலம்விளங்க சதிருடனவதரித்த
சுந்திரமைந்தாகேளாய் சீக்கிரம்தனுர்வேதத்தை
சிந்தையிலறிந்துக்கொண்டாய் சந்தோஷங்கொண்டேனப்பா
விந்தையாய்தினந்தினம் விவரமாயறிந்திடாயே.

வசனம்

கேளுமப்பா பரதனே! தனுர்வேதம் சீக்கிரம் கற்றுக்கொண்டபடியால் உனக்கு நாளடைவில் போதித்துவைக்கிறேனப்பா பரதனே.

கண்ணுவர் கவி

செல்வியேசொல்வேன்கேளும் சீர்பெறமைந்தனுக்கு
பல்கலையோதிவைத்தேன் பாசமாயினிமேல்நீயும்
நல்லதோர்துஷ்டியந்த ராஜனோடுறவுகொண்டு
சல்லாபமாகவாழ்ந்து தையலேஇருந்திடாயே.

வசனம்

ஆனால் கேளும் சகுந்தலையே! உனது மைந்தனாகிய பரதனுக்கு தனுர்வேதம் கற்பித்துக்கொடுத்துவிட்டேன். பரதனுக்கு வயது

பனிரெண்டு வயதாகிவிட்டது. அவன் அரசுக்குரியவனாகவேண்டும். உன்னை அழைத்துக்கொண்டு போவதாக வாக்களித்த துஷ்டியந்தன் வரக்காணோம். இனி இவ்விடம் நீ இருப்பது தகுதியல்ல. மைந்தனை அழைத்துக்கொண்டுபோய் உன் நாதனோடு சுகமாக வாழுமம்மா.

சகுந்தலை புலம்புவது தரு

ஐயோநானென்னசெய்வேன் மெய்யும்பதருதையோ
அருமையாய்எனை வளர்த்தீர் தந்தையரே

தையலைப்போகும்படி துய்யவாசொல்லவந்தீர்
தவிக்குதேயெந்தன்நெஞ்சம் தந்தையரே

உந்தனையெப்படிவிட்டு அந்தமாய்மன்னன்பதி
உத்தமியாளும்செல்வேன் தந்தையரே

எந்தனைவளர்ப்பதற்கு எவ்வளவோதுன்பப்பட்டீர்
என்னாலென்னசுகம்கண்டீர் தந்தையாரே

கண்ணுவர் தரு

செல்வியேநீரும்சிந்தை கலங்காதேவாரும்
சொல்லும்வார்த்தைதன்னை தடுத்திடாதேநீரும்
சுருள் சுந்தரநாதனை நாடியேஅம்மா
விந்தையாய்வாழ்குவாய் கூடியேசும்மா செல்

சகுந்தலை தரு

இத்தனைநாளாய் எந்தனைமேலாய்
அந்தமாய்வளர்த்த தந்தையேகேளாய்
சுருள் அரிவையாளெப்படி அத்தினாபுரியை
தெரிந்துமேசெல்வேன் சொல்லுவீரறிய இத்

கண்ணுவர் தரு

ஆசைஎன்மகளே அரிவைநீபுகழ
அன்புள்ளசிஷ்யை அனுப்புவேன் துணையாக
சுருள் ஆதரவாக அன்புடனேகூடி
சேதாரமில்லாமல் செல்லுவீர்நாடி ஆசை

சகுந்தலை தரு

தந்தையேசரணம் தாளிணைசரணம்
தையலும்யான்பணிந்து சென்றுவாரேன்தருணம்
சுருள் தந்தையேஎனக்கு விடையதுதாரும்
அந்தமாய்வாழ ஆசிகள்கூறும் தந்

கண்ணுவர் தரு

பாதமேபணிந்த பத்தியில்சிறந்த
பாவையேசுகமாக பாரிலேவாழ்குவாய்

சுருள் பத்தாவோடு நத்தியேகூடி
புத்தியாக புகழுவாய்கூடி பாத

பாதன் தரு

ஐயரே உந்த னடி தனில்மைந்தன்
அடிபணிந்தேனே என்னைக்காருமையா
சுருள் அன்னையோடுமே உன்னிதமாக
அன்புடன்சென்று மன்னனும்வாரேன் ஐய

கண்ணுவர் கவி

திருவடிபணிந்துநின்ற சிறுவனேவாழிவாழி
அருமைஉன் தாயினேடு அத்தினபுரியைநாடி
பெருமையாய்தந்தையுடன் புண்ணியசெங்கோல்தன்னை
ஒருமையாய்ஆண்டுநீயும் உத்தமாயிருந்திடாயே.

கண்ணுவர் வசனம்

ஆனல் கேளுமப்பா பரதனே! ஆசீர்வதித்தேன் உன் தந்தை செங்கோலைத்தாங்கி அரசுசெலுத்தி சுகமாக வாழ்ந்திருப்பாய் அப்பா கண்மணியே.

சகுந்தலை தரு

நடந்துவாடாமகனே அத்தினபுரி
நாமும்போவோம்சுதனே
தடம்பெருவனத்தை தாண்டியேசென்றுமே
துடர்ந்துமேவருகுவாய் தனயனேஇன்றுமே நட

பரதன் தரு

அன்னையுன்பின்னேநாடி இதோ
அன்புடன்வாரேன்கூடி
என்னநான்செய்குவேன் எந்தன்கால்கரம்
ஏகியேவந்ததாலே நோகுதேபார்திறம் அ

சகுந்தலை தரு

அப்பாமகனேவாடா கஷ்டப்படாதே
அய்யோமகனேவாடா
இப்பெரும்வனந்தாண்டி ஏகியேசென்றாலே
இருக்குதுநகரது ஏகுவாய்முன்னாலே அ

பரதன் தரு

தந்தையாளுநகரெங்கையோ காணேன்
தாயேசொல்லுமிங்கையே

விந்தையாய்முனிவர் விட்டசீஷரோடு
அந்தமாய்நகரம் வந்தோமேமூவரோடு த

சகுந்தலை கவி

விந்தையாய்அத்தினபுரி மைந்தனேவந்துசேர்ந்தோம்
அந்தமாய்சீஷரேகேள் அருமுனிவர்தனித்திருப்பார்
சிந்தையுமகிழ்ச்சியாக சீக்கிரம்நீங்கள்செல்வீர்
சுந்தரநாதனில்லம் சேயிழையாளும்போறேன்.

வசனம்

கேளும் மைந்தனே! இதோ காண்கிற தேசமும் அரண்மனையும் உன் தந்தையாளப்பட்ட அத்தினபுரியாகும். அரண்மனையில் உன் தந்தையிருப்பார் கேளுங்கள் என்னுடன் வந்த கண்ணுவமுனிவரின் சீடர்களே முனிவருக்கேதாகிலும் ஆபத்து நேராமல் பாதுகார்த்து வருவீர் சீக்கிரம் சென்று வாருங்கள்.

பொது வசனம்

இவ்விதமாகத்தானே கண்ணுவமுனிவரின் சீஷர்கள் சகுந்தலை யிடம் விடைபெற்று சென்றுவிட இப்பால் துஷ்டியந்தராஜன் மந்திரி மார்களோடு அரசிலிருக்கும்போது சகுந்தலையைப்பார்த்து இவளோடு பேசினல் அவநம்பிக்கை ஏற்படுமென்று மௌனமாக யோசிக்கிறான்.

துஷ்டியந்தன் விருத்தம்

அந்தமாய்கானகத்தில் அன்புடன்காந்தருவமாய்
சுந்தரன்கூடினதால் சகுந்தலைதேடிவாராள்
இந்தநேர்மாதுகூட இப்பொழுதுபேசொணுது
மந்திரிமாரறிந்தபின்பு மாதைபின்னழைத்துக்கொள்வோம்.

வசனம்

ஆஹா இதோ வருகிற மாதைப் பார்த்தால் கண்ணுவரிஷி ஆசிர மத்திலிருந்த சகுந்தலைபோல் காண்கிறது. அதுவுமின்றி அவளை காந்தருவ விவாகம் செய்து வெகுநாளாகிவிட்டது மறந்துவிட்டேன். எதிர்கொண்டு மாதையழைத்தால் சகலமும் நகைப்பார்கள் நம்பிக்கை ஏற்பட்ட பிறகு அழைத்துக்கொள்ளலாம் ஆதலால் மௌனமா யிருந்துவிடுவோம்.

சகுந்தலை தரு

அந்தமுள்ளமன்னவரே உந்தன் திருவடிக்கு
அரிவையாள்போற்றிசெய்தேன்நாதனே என்னை
ஆசீர்வதித்திடுவீர்நீதனே

அந்

துஷ்டியந்தன் தரு

எந்தவூருளந்ததேசம் எந்திழையேளங்குவந்தாய்
எந்தமேனோடுஉனக்கென்னபேச்சியே பெண்ணே
ஏகிடுவாய்வெளியேசீச்சியே எந்த

சகுந்தலை தரு

அடையாளம்தெரியாமல் அரிவைமேல்கோபிக்கா தீர்
அடர்வனத்தில்வேட்டையாடவந்தீரே அங்கு
துடர்ந்தபெண்மயில்மேலேநோக்கீரே அடை

துஷ்டியந்தன் தரு

வீண்வார்த்தைபேசவேண்டாம் வேட்டையாடவந்தயிடத்தில்
வேந்தனுன்உந்தனைக்கண்டதில்லையே பெண்ணே
சாந்தமாய்பேசவந்தாய்தொல்லையே வீண்

சகுந்தலை விருத்தம்

ஆரெனவென்றுகேட்ட அன்புள்ளமன்னனேகேளீர்
கூறுவேனுன்மனைவியாகும் கோதைபேர்சகுந்தலையே
பாருமேயுந்தன்மைந்தன் பரதனென்றுபேருமுள்ளான்
கூறுவேனின்னிருப்பந்தான் கண்ணுவராசிரமந்தானே.

வசனம்

ஆனால் கேளும் நாதனே! நான் உன்தேவியாகிய சகுந்தலை என் பெயர். இதோ நிற்கும் சிறுவன் உன் மைந்தனாகும். நான் வசிக்குமிடம் கண்ணுவமுனிவர் ஆசிரமம். என்னை நீர் மந்திரிமூலமாய் அழைத்துக்கொள்வதாக வாக்குதந்து வந்தீரே ஏன் இது நாள் வரையில் மறந்துவிட்டீர் நான் நேரில்வந்தேன் நாதனே.

துஷ்டியந்தன் கவி

சரிசரிபெண்ணேநீதான் சாதித்துப்பேசுகின்றாய்
அரசனும்தனித்துவேட்டை யாடவேவருவதுண்டோ
பரிவுடனுன்னைக்கூடி பக்ஷமாய்மணமுஞ்செய்த
வரலாற்றையின்னதென்று வகுத்துரைசெய்குவாயே.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! நானோ அரசன்; நான் கண்ணுவர் ஆசிரமத்திற்கு என்னகாரணத்தால் வரப்போகிறேன். அப்படி வந்தாலும் தனித்து வருவேனா? இதென்ன விந்தை? நான் உன்னைக்கூடினதெப்படி? அந்த வரலாற்றை விவரமாய் சொல்லும் பெண்ணே.

## சகுந்தலை அகவல்

வந்ததோர்விபரம் வகுத்துமேயுரைப்பேன்
அந்தமாய்வேட்டை யாடிடவந்து
அரசனே தனித்து வந்திடநீரும்
கண்ணுவர் ஆசிரமம் களிப்புடனிருந்த
கன்னியாளென்னை கண்டிடஅப்போ
காதலாய்உமக்கு கருத்தொடுபெரிய
ஆசனந்தந்தேன் அதிலிருந்தெந்தன்
வரலாறுகேட்க வகையுடன்சொன்னேன்
மீராதகாதல் மன்னவாகொண்டு
ஆகாயவாணை அம்மனைசாக்ஷி
ஆகாயவாணி அம்மனேசாக்ஷி
வைத்துமேஎந்தன் வயிற்றினிலுதிக்கும்
புத்திரன்தனக்கு பட்டமேதருக
சத்தியம்செய்து தையலாள்என்னை
காந்தருவபுணர்ச்சி களிப்புடன்செய்து
மந்திரிமூலமாய் அழைக்கிறேனென்று
வார்த்தையும்பேசி வந்தீரேமன்னா
சீர்பெறவயிற்றில் செனித்ததோர்புதல்வர்
கண்ணுவரினாலே களிப்புடன்பரதன்
வண்ணமாய்நற்பெயர் விந்தையாய்வைத்தார்
திண்ணமாய்வித்தை சிறுவனும்கற்க
எண்ணமாய்இங்கு இட்டுமேவந்தேன்
வரலாறுஇதுவே வகுத்துரைசெய்தேன்
அறிகுவீர்மந்திரி அமைச்சரேநீங்கள்.

### துஷ்டியந்தன் தரு

சரிசரியுன்வார்த்தைநிறுத்து இப்போ
அறிந்தேனேயுந்தனின்கருத்து

நெறியுள்ளவேட்டைக்கு நான்தனிவந்தேனா
பரிவுடனுரைத்தாயே பாவையேநிசந்தானா சரி

கண்ணுவர்ஆசிரமம்வரவில்லையே நீயும்
கருத்தாகபேசினாய்தொல்லையே

வண்ணமாய்அங்கு வேலைஎனக்கென்ன
திண்ணமாய்வந்தாலும் தையலைமோகிப்பேனா சரி

ஆகாயவாணின்சாக்ஷியாய் உன்னை
காந்தருவம்செய்தேனென்றாய்சூக்ஷியாய்

ஏகுவாய்இவ்விடம் இருக்காதேகன்னியே
ஆகாதவார்த்தையை பேசினாய்பன்னியே சரி

### சகுந்தலை விருத்தம்

என்னநான்செய்வேனையோ ஏந்திழையாளைமன்னன்
அனீதமானவார்த்தை அறிவிக்கின்றாரே இன்னாள்
முன்னாலேசாக்ஷிவைத்த முறைப்படிஆகாயவாணி
கன்னிபூதேவியாளே கழருவீர்நிஜமுந்தானே.

### வசனம்

ஐயையோ தெய்வமே! என்னை காந்தர்வவிவாகம் செய்யவில்லை யென்றும், ஆசீர்மம்வரவில்லை என்றும் ஒரேதீர்மானமாக சாதிக்கின்றாரே இது தருமமாகுமா? சாக்ஷியாகயிருந்த ஆகாயவாணி பூமிதேவியாகிய நீங்களும் பெண்கள் தானே; பெண்ணாகப்பிறந்த யான் இருதலைக் கொள்ளி எறும்புபோல இடர்பட்டு வாடவுந்தகுமா? அரசன்கோலுங் கோணுமல்லவா; முறைபிறழ்ந்த முடியுடையமன்னன் தேவியென்று வாய்பேசாதிருக்கின்றீர்களே; உண்மை உரையாவிடில் இச்சபைமுன் பாகவே என் உயிரைவிடுவது சத்தியம்! சத்தியம்!!

### ஆகாயவாணி கவி

சந்தேகங்கொள்ளவேண்டாம் சந்திரகுலத்துமன்னா
சுந்திரக்கன்னியாளை சோதிக்கவேண்டாம்முன்னால்
புந்தியும்பொருந்தவேதான் புணர்ந்திடசாக்ஷிவைத்த
அந்தமேதார்முறைமையுண்டு ஆதலால்கூடிவாழ்வீர்.

### வசனம்

ஆனால் கேளும் துஷ்டிமன்னனே! நீ சந்தேகம் கொள்ளவேண்டாம். சகுந்தலை மனதை கஷ்டப்படுத்தவேண்டாம். நீ முன் கண்ணுவர் ஆசிரம்போய் சகுந்தலையை காந்தருவ மணம்முடிக்க என்னை சாக்ஷி வைத்தாயே; நீ வார்த்தை பிரளவேண்டாம்; உனக்கும் சகுந்தலைக்கும் செனித்த புதல்வனாகிய பாதனே உன்மைந்தன். இனிசந்தேகமில்லாமல் இருவரும் மனசந்தோஷத்துடன் வாழ்குவீர் மன்னனே.

### துஷ்டியந்தன் கவி

வாணியின்வாக்குகேட்ட வண்மையென்மந்திரிமாரே
பூணிடுங்கொங்கையாளை புணர்ந்ததும்உண்டுமன்னாள்
பேணியேஅரசாங்கத்தின் பெருமையாய்இருந்துவிட்டேன்.
நாணியேநங்கைவாட ஞாயமும்இல்லைதானே.

ஆனால் கேளும் மந்திரிமார்களே! ஆகாயவாணி அசரீயவாக்கு உண்மை; கன்னியை மணர்ந்தது என்று சொன்னபடியால் இனி சும்மா இருக்கலாகாது மந்திரிமார்களே.

துஷ்டியந்தன் தரு

சந்தேகந்தெளிந்தேனேமாதே நீ
சிந்தையும்வாடாதேகோதே

எந்தன்தேவியென்று யாவருமறியவே
உந்தனைசோதித்தேன் சுந்தரம்பிரியவே ச

சகுந்தலை தரு

பொன்முடிதரித்தநாதா உந்தன்
பாதம்பணிந்தேனேநீதா

கன்னிவாணிசொன்ன கருத்தலையறிந்திரா
என்னைபேதகமாய் பன்னியுரைத்தீரே பொ

துஷ்டியந்தன் தரு

உந்தனைமுன்சேர்த்துக்கொண்டாலே இந்த
உலகத்தோர்பழிப்பாரேபின்னாலே

அந்தமுள்ளமைந்தன் அத்தினாபுரிதன்னை
சொந்தமாகயாள செங்கோலுந்தருகவே உ

பாதன் தரு

தந்தையேஉந்தன்பாதமே அன்பாய்
தனையன்பணிந்தேன்நீதமே

எந்தன் தந்தைஎன்று இதுநாளுமறியேனே
வந்துவாணிசொல்ல சந்தேகந்தெரிந்தேனே த

துஷ்டியந்தன் தரு

திருவடிபணிந்திட்டபாலனே இன்னும்
சுகமாகவாழ்குவாய்சீலனே

அருந்தவமுனிவர்கள் ஆசீர்வதிக்கவே
பெருமையாய்நகரை யாளுவாய்களிக்கவே தி

துஷ்டியந்தன் கவி

என்னிடமந்திரிமாரே எனக்குமேபின்பு
அன்புடனே இந்த அத்தினாபுரிதன்னை
பொன்முடிபூண்டுயாள புதல்வனும்இருப்பதாலே
உன்னிதமாகமுடி ஒருமையாய்சூட்டுவோமே.

வசனம்

ஆனால் கேளும் மந்திரிமார்களே! எனக்குப் பிறகு இந்த அத்தினா புரிநகரையாளும்படி என் மைந்தன் பரதன் அவனுக்கு தக்கவயது ஆகிவிட்டபடியால் இனி இளவரசுபட்டம் சூட்டாமல் இருக்கப்படாது. அதனால் பாதனுக்கு முடிதரிக்கவேண்டும் மந்திரிமாரே.

# பூமகள் புதிய நாடக விளம்பரம்

(பூமகள் பதிப்பை கவனித்து வாங்கவும்)

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: இதன் அடியிற்கண்ட புத்தகங்களும், இன்னும் அநேகவிதமான புத்தகங்களும், எமது பூமகள்விலாச அச்சுக்கூடத்தில் தகுந்த வித்வான்களைக் கொண்டு பிழையறச் சீர்திருத்தப்பட்டு அச்சிட்டுவருவதால் யாவரும் பூமகள் பதிப்பை கவனித்து வாங்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

| (ரிஜிஸ்டர் செய்தது) | ரூ | அ | ப |
|---|---|---|---|
| வள்ளி கலியாணநாடகம் | 0 | 6 | 0 |
| சிங்கிசர் கலியாணநாடகம் | 0 | 5 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகமென்னும் குசலவநாடகம் | 0 | 6 | 0 |
| மாங்கனி சரித்திர நாடகம் | 0 | 6 | 0 |
| கம்ச சம்மாரநாடகம் | 0 | 5 | 0 |
| தொண்டரடிப்பொடியாழ்வார்நாடகம் | 0 | 5 | 0 |
| தாருகாவனரிஷி சரித்திரநாடகம் | 0 | 5 | 0 |
| சபலவல்லி நாடகம் | 0 | 5 | 0 |
| பத்மாவதி நாடகம் | 0 | 5 | 0 |
| நரகாசுர சம்மாரநாடகம் | 0 | 5 | 0 |
| சந்திரன் கர்வபங்கமென்னும் சந்திராம்பாள்நாடகம் | 0 | 5 | 0 |
| மணிமாலன் சண்டைநாடகம் | 0 | 6 | 0 |
| வீமன் அர்ச்சுனன் யுத்தநாடகம் | 0 | 6 | 0 |
| சகுந்தலை நாடகம் | 0 | 5 | 0 |
| ஸ்ரீராம ஆஞ்சநேய யுத்தநாடகம் | 0 | 5 | 0 |
| சிறுத்தொண்டபத்தன் நாடகம் | 0 | 8 | 0 |
| வல்லபைகலியாணமென்னும் விநாயகர் கலியாணநாடகம் | 0 | 6 | 0 |
| சுபத்திரா பரிணயநாடகம் | 0 | 8 | 0 |
| இலட்சுமணாதேவி மாலையிடுநாடகம் | 0 | 6 | 0 |
| அருந்ததி கலியாண நாடகம் | 0 | 6 | 0 |
| வள்ளாலமகாராஜன் நாடகம் | 0 | 5 | 0 |

எமது விலாசம்:

**அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்**

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.